விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 199 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 21 வெள்ளிக்கிழமை (05.07.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## தெல்லிப்பழை மகளிர் இல்லம் தொடர்ந்தும் இயங்குகிறது

### தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம் அறிவிப்பு

(தெல்லிப்பழை)


தெல்லிப்பழை மகளிர் இல்லத்தை மூடுமாறு வடக்கு மாகாண ஆளுநர் உத்தரவு விடுத்ததாக வெளிவந்த செய்தி முற்றிலும் தவறானது.

குறித்த மகளிர் இல்லம் தொடர்ந்தும் செயற்பட்டு வருகிறது என தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம் நேற்று விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தெல்லிப்பழை 15

## சம்பந்தனுக்கு யாழில் அஞ்சலி



03

சதொசவில்

### அத்தியாவசிய பொருட்களின் விலை குறைப்பு

(கொழும்பு)

அத்தியாவசிய உணவுப் பொருட்கள் சிலவற்றின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாக லங்கா சதொச நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த விலைக் குறைப்பானது நேற்று 15



ஜூலை 5
இன்று
கரும்புலிகள்
தினம்

# மீள ஆரம்பிக்கப்பட்டுள்ள யுக்திய சுற்றிவளைப்பு

- மேலும் 6 ஆயிரம் பேர் கைது
- பெருமளவு போதைப்பொருள் பறிமுதல்

(கொழும்பு)

நாடு முழுவதும் நேற்று மீள ஆரம்பிக்கப்பட்டுள்ள யுக்திய சுற்றிவளைப்பு நடவடிக்கை காரணமாக மேலும் 6 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் சுற்றிவளைப்பின்போது பெருமளவிலான போதைப்பொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

(15ஆம் பக்கம் பார்க்க)



## கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின்

### 3ஆம் கட்ட அகழ்வுப் பணி ஆரம்பம்



15

## தடைப்பட்ட திட்டங்கள் மீண்டும் நடைமுறைப்படும்

### எரிசக்தி அமைச்சர்

(கொழும்பு)

கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் வெற்றியினால் கடந்த நெருக்கடியின்போது தடைப்பட்டிருந்த எரிசக்தித் துறை தொடர்பான திட்டங்களை மீண்டும் நடை 15



## பாராளுமன்ற அவசர கூட்டம்

### ஒரு கோடி ரூபாய் செலவு

(கொழும்பு)

பாராளுமன்ற அவசர கூட்டத்தை நடத்தியதற்கு சுமார் ஒரு கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாக பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதி விசே 02

## தேர்தல் பிற்போடப்பட வேண்டும்

### விக்னேஸ்வரன் எம்.பி கருத்து

(யாழ்ப்பாணம்)

“தேர்தலை பிற்போட வேண்டும்” என்பதே எனது கருத்து என பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். நேற்று நடைபெற்ற ஊடகச் சந்திப்பின்போது இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய அரசாங்கம் அமைப்பது நாட்டுக்கு நல்லது. ஆனால் தமிழ்க் கட்சிகள் 15



## தோட்டத் தொழிலாளர்களுக்கு 1700 ரூபாய் வேதன அதிகரிப்பு

### வர்த்தமானி அறிவித்தலுக்கு இடைக்கால தடையுத்தரவு

(கொழும்பு)

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வேதனத்தை 1700 ரூபாயாக அதிகரித்து தொழில் அமைச்சரினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை செயற்படுத்துவதை தடுத்து உயர்நீதிமன்றம் இடைக்கால தடையுத்தரவை பிறப்பித்துள்ளது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியலமைப்பின்படி தேர்தல் நடைபெறும் ரணிலிடம் நாட்டை ஒப்படையுங்கள்

### அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

(கம்பஹா)

ஜனாதிபதி தேர்தலையோ அல்லது வேறு எந்த தேர்தலையோ ஜனாதிபதியோ அல்லது அரசாங்கமோ ஒத்திவைக்க வேண்டிய அவசியமில்லை என ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளர் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

தேர்தலைச் சந்திக்க முதுகெலும்பில்லாத எதிர்க்கட்சிகள் தேர்தலை ஒத்தி வைப்பது பற்றி பேசினாலும் அரசாங்கம் அரசியலமைப்பின் பிரகாரம் தேர்தலை நடத்தும் என அமைச்சர் வலியுறுத்தினார்.

மேலும்,ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நடைமுறைப்படுத்தப்பட்ட நிலையான பொருளாதாரக் கொள்கைகள் காரணமாகவே பாரிஸ் மாநாட்டில் நாட்டின் கடனை மறுசீரமைக்க தீர்மானிக்கப்பட்டது. மேலும், எதிர்காலத்தில் நாடும் மக்களும் எதிர்பார்க்கும் பொருளாதார, அரசியல், சமூக சீர்திருத்த நடவடிக்கைகளை தற்போதைய ஜனாதிபதியால் மட்டுமே மேற்கொள்ள முடியும். எனவே, அவரை மீண்டும் ஒருமுறை ஜனாதிபதியாக நியமிப்பதன் மூலம், அடுத்த ஐந்து வருடங்களுக்குள், உலகின் பலமான பொருளாதாரம் கொண்ட நாடாக இலங்கையை உருவாக்க முடியும்.

இரண்டு வருடங்களுக்கு முன்பு உங்கள் நாடு எப்படி இருந்தது என்று யோசித்துப் பாருங்கள். எரிபொருள் இல்லை, மருந்து இல்லை, எரிவாயு இல்லை, சிறு குழந்தைக்கு பால் பவுடர் இல்லை, அத்தியாவசிய சேவைகள் நிறுத்தப்பட்டன. கட்டுமானத் தொழில்கள் அனைத்தும் சரிவடைந்தன. முழு நாடும் விரக்தியில் இருந்தது. ஜனாதிபதி சிக்கலில் இருந்து நாட்டைப் பொறுப்பேற்கும் போது ஒரு பக்கம் கடுமையான பொருளாதார நெருக்கடி, மறு பக்கம் பாரிய மக்கள் எதிர்ப்புமாக இருந்தது என்றார். (ம-7,10)


**யா/ மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை பாடசாலை அபிவிருத்திக்குழு பொதுக்கூட்டம்**

காலம் - 21.07.2024 ஞாயிறு
நேரம் - காலை 9.30 மணி
இடம் - பாவலர் துரையப்பா பிள்ளை மண்டபம்

அனைத்து பெற்றோர்களும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

- செயலாளர் -
பாடசாலை அபிவிருத்திக் குழு.

(C-740)


## ஜனாதிபதியின் பதவிக்காலம்

### திங்கள் ஆராய நீதிமன்றம் தீர்மானம்

(கொழும்பு)

தற்போதைய ஜனாதிபதியின் பதவி காலம் தொடர்பில் தெளிவூட்டுமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுவை திங்கட்கிழமை ஆராய்வதற்கு உயர் நீதிமன்றம் நேற்று வியாழக்கிழமை தீர்மானித்துள்ளது.

இந்த மனுவை ஆராய்வதற்கு ஐந்து நீதியரசர்கள் அடங்கிய குழாமை, பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய நியமித்துள்ளார்.

தனது தலைமையில் உயர் நீதிமன்ற நீதியரசர்களான விஜித் மலல்கொட, முர்து பெர்ணாண்டோ, பிரித்தீ பத்ம சூரசேன, எஸ். துரைராஜா ஆகியோரே இந்த மனுவை ஆராயவுள்ளனர். (ம-7,10)

## கிராம உத்தியோகத்தர்களின் சுகவீன விடுமுறை போராட்டம் தொடர்கிறது

(கொழும்பு)

அகில இலங்கை கிராம உத்தியோகத்தர் சங்கத்தினர் முன்னெடுத்துள்ள சுகவீன விடுமுறை போராட்டம் நேற்று நடைபெற்றது.

சம்பளம் கொடுப்பனவு உள்ளிட்ட சில கோரிக்கைகளை முன்வைத்து அகில இலங்கை கிராம உத்தியோகத்தர் சங்கத்தினர் தொழிற்சங்க நடவடிக்கையினை முன்னெடுத்துள்ளனர்.

எவ்வாறாயினும் தங்களது கோரிக்கைகளுக்கு உரியதரப்பினரிடம் இருந்த சாதகமான தீர்வு கிடைக்கவில்லை என அகில இலங்கை கிராம உத்தியோகத்தர் சங்கத்தின் பிரதமர் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் நேற்று பணிபகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

தங்களது கோரிக்கை தொடர்பாக சாதகமான நிலை எட்டப்படவில்லை என பல்கலைக்கழக தொழிற்சங்க ஒன்றியத்தின் இணைத்தலைவர் தம்மிக்க எஸ் பிரியந்த தெரிவித்துள்ளார். (ம-7,10)

## பாராளுமன்ற...

அறிக்கையொன்றை முன்வைப்பதற்காக நேற்று முன்தினம் பாராளுமன்றக் கூட்டம் நடைபெற்றது.

அதன்போது, ஜனாதிபதியின் உரையின் பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் அறிக்கை வெளியிட்டு பாராளுமன்று ஒத்திவைக்கப்பட்டது. இந்த நிலையில், இந்த கூட்டம் வெறும் ஒன்றரை மணி நேரம் மட்டுமே நடைபெற்றது.

அதன் படி, கூட்டம் குறுகியதாக இருந்தாலும், பொதுவாக ஒரு பாராளுமன்றக் கூட்டத்தின் ஒரு நாளுக்குச் செலவிடப்படும் தொகையே குறுகிய கூட்டங்களில் இருக்கும் என்று பாராளுமன்ற செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார். (ம-7,10)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
28 . 04 . 2001

மறைவு
05 . 07 . 2022

### அமரர் பவானந்தன் கஜேந்திரன்

(ஹாட்லி கல்லூரி பழைய மாணவன்)

திதி : சப்தமி வளர்பிறை

நீ நிஜமாய் மறைந்து ஆண்டுகள்
இரண்டு ஆனாலும் எம் நினைவுகளில்
என்றும் மறையாமல் நிழலாய்
உலாவி வருகின்றாய்
உன் மறைவால் நீ திரிந்த வீதிகள் பாழாய்
கிடக்கின்றன. நீ ஆசையாய் வளர்த்த
பூச்செடிகள் உன்னை எதிர்பார்த்து
வாடிக்கிடக்குதடா கஜனே.
என்றும் உன் நினைவில்...


(C-746)

ஆத்தியடி,
புலோலி மத்தி, பருத்தித்துறை

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

பிறப்பு
19 . 09 . 1942



இறப்பு
03 . 07 . 2024

### இராசா பரமானந்தம்

(இளைப்பாறிய P.W.D ஓவசியர்)

இல.18A சிவகுருநாதர் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசா பரமானந்தம் அவர்கள் 03.07.2024 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசா - வள்ளியம்மா தம்பதிகளின் புதல்வனும் காலஞ்சென்ற நடராசா மற்றும் சிவக்கொழுந்து தம்பதிகளின் மருமகனும் ஈஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் நளினி(France), நகுலன்(Germany), நளாயினி(ஆசிரியை - யா/இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் திருவருட்செல்வன்(France), ஸ்ரீபிரவீனா(Germany), இரகுலேசன்(ஆசிரியர் - யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் மாமனாரும் நிரூபன், நிவேதன், நிருத்திகா, சௌமியா, ஆஷா, நர்த்தனா, நயனா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான அருளானந்தம், சண்முகானந்தன் மற்றும் சிவானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் யோகராணி, சுகிர்தமலர், மங்களராணி காலஞ்சென்றவர்களான வசந்தினி, ஸ்ரீஸ்கந்தராசா, குணநாதன் மற்றும் சறோஜினி, பேரின்பநாதன், ரங்கநாதன் ஆகியோரின் மைத்துனரும் யமுனா, வேலாயுதபிள்ளை, சைலஜா, நிகிலா ஆகியோரின் சகோதரர் முறையிலானவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (07.07.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

18A, சிவகுருநாதர் வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.


077 608 7687
077 812 4144


(1392)

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரா.சம்பந்தனுக்கு யாழில் அஞ்சலி







(யாழ்ப்பாணம்)

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மூத்த தலைவர் இராஜவரோதயம் சம்பந்தனது பூதவுடலுக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் பலரும் அஞ்சலி செலுத்தினர்.

விசேட விமானம் மூலம் யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வரப்பட்ட சம்பந்தனின் பூதவுடல் மார்டின் வீதியில் உள்ள இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்திற்கு நேற்றுக் காலை 10 மணியளவில் கொண்டுவரப்பட்டது.

இதன்போது சம்பந்தனின் பூதவுடலுக்கு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கொடி போர்த்தப்பட்டு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

அஞ்சலி நிகழ்வில் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, கட்சியின் மூத்த தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், ஏனைய கட்சிகளின் தலைவர்கள் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். தொடர்ந்து யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கிற்கு கொண்டு செல்லப்பட்ட சம்பந்தனின் பூதவுடல் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. (நி-6-33)

## கல்வி நடவடிக்கைகளை ஆதரித்தவர் பிரபாகரன்

## கல்வி அமைச்சர் சுசில் பெருமிதம்

(கொழும்பு)


**தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் பாடசாலையை மூடுவதற்கு ஒருபோதும் இடமளிக்கவில்லை என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.**



செயற்கை நுண்ணறிவு தொடர்பான மாணவர் சங்க வேலைத்திட்டத்தை ஆரம்பித்து வைப்பதற்காக அலரி மாளிகையில் இடம்பெற்ற வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், "சிலர் பாடசாலைகளை மூடிவிட்டு தொழில் உரிமைகளை கோரிப் போராட்டங்களை முன்னெடுத்து வந்தாலும், பல வருடங்களாக போராடிய விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஒருபோதும் பாடசாலையை மூடுவதற்கு இடமளிக்கவில்லை.

எந்தப் பரீட்சைக்கும் இடையூறு செய்யவில்லை. தொழிற்சங்கங்கள் அதற்கு அப்பால் சென்று எதிர்கால சந்ததியினரை அடகு வைத்து தொழில் உரிமைகளை வென்றெடுக்க முயற்சிக்கின்றது.



தொழில்முறை உரிமைகளை வென்றெடுப்பதில் எந்தப் பிரச்சினையும் இல்லை, ஆனால் எதிர்கால சந்ததியினர் தொழில்முறை உரிமைகளை வென்றெடுப்பதை அனுமதிக்க முடியாது" என குறிப்பிட்டுள்ளார். (நி-6)

## கொழும்பு-சிலாபம் வீதியில் பேருந்து-லொறி விபத்து

(கொழும்பு)

சிலாபம் - கொழும்பு பிரதான வீதியின் மாதம்பே, இரட்டைக்குளம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்தில் 25 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். நேற்றுக் காலை 9.15 மணியளவில் பேருந்து-லொறியொன்று மோதியதில் விபத்து இடம்பெற்றுள்ளது.

காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-6)

### ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில்

## தேர்தல்கள் ஆணைக்குழுவின் தீர்மானத்திற்கு ஜனாதிபதி ஆதரவு

(கொழும்பு)

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது என்ற தேர்தல் கள் ஆணைக்குழுவின் தீர்மானத்திற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆதரவளிப்பதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

ஜனாதிபதியின் பதவிக் காலம் 5 வருடங்கள் என ரணில் விக்கிரமசிங்க உறுதியாக நம்புவதாகவும் அந்த அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஜனாதிபதித் தேர்தல் திகதியை நீதிமன்றம் விளக்கமளிக்கும் வரை தற்போது திட்டமிட்டபடி ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதைத் தடுக்கும் உத்தரவை பிறப்பிக்குமாறு கோரி வர்த்தகரான தயான் லெனவ நேற்று முன்தினம் உச்ச நீதிமன்றில் அடிப்படை உரிமை மனுவொன்றை சமர்ப்பித்திருந்தார். இது தொடர்பில் கருத்து தெரிவித்த ஜனாதிபதி, இந்த மனுவை சமர்ப்பிப்பதற்கு முன்னர் குறித்த நபர் தன்னிடமிருந்தோ அல்லது சட்டத் தரணிகளிடமிருந்தோ எந்தவொரு கருத்தையும் பெறவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

## 5 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் போதைப்பொருட்களுக்கு அடிமையாகியுள்ளனர்

### பொலிஸ் மா அதிபர் அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

நாட்டில் 5 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் போதைப் பொருட்களுக்கு அடிமையாகியுள்ளதாக பொலிஸ்மா அதிபதி தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார். யுக்திய நடவடிக்கையின் ஆறு மாதகால முன்னேற்றம் மற்றும் இரண்டாம் கட்ட நடவடிக்கை குறித்து ஊடகவிய லாளர்களுக்கு அறிவிப்பதற்காக இடம்பெற்ற கூட்டத்தின் போதே பொலிஸ் மா அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

பொலிஸ் மாதிபர் தேசபந்து தென்னகோன் மேலும் தெரிவிக்கையில் பல்வேறு பிரதேசங்களுக்கு போதைப் பொருட்களை விநியோகிப்பதாகக் கூறப்படும் 5,979 பேரில் இதுவரை 5,449 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுற்றிவளைப்பு நடவடிக்கை களின் போது கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்களின் மொத் தப் பெறுமதி சுமார் 1,975 மில் லியன் ரூபாய் ஆகும்.

யுக்திய நடவடிக்கையின் போது போதைப்பொருள் தொடர் பில் இதுவரை ஒரு இலட்சத்து 52 ஆயிரத்து 72 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களில் 5,448 பேர் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரி வித்தார். (நி-6)


சேவை நலன் பாராட்டு



திருமதி.கலாநாயகி சோதிதாசன் (SLTAS-I)

ஆசிரிய ஆலோசகர் (ஆரம்பக் கல்விப் பிரிவு)

ஆசிரியராய் ஆசிரிய ஆலோசகராய் முப்பத்துநான்கு ஆண்டுகள் நிறைவான நின் சேவைக்கும் மகிழ்வான ஓய்வுக்கும் மனதார வாழ்த்துகின்றோம்

சேவை விபரம்

யா/கொழும்புத்துறை இந்து ம.வி 27.03.1990-12.05.1996
கிளி/உருத்திரபுரம் மகாவித்தியாலயம் 13.05.1996-28.02.2000
கிளி/கனகபுரம் ம.வி 01.03.2000-31.08.2000
கிளி/பற்றிமா றோ.க.வித்தியாலயம் 01.09.2000-14.09.2002
யா/பாசையூர் சென்.அன்ரனீஸ் வித்தி 15.09.2002-31.12.2002
யா/கொழும்புத்துறை இ.ம.வி 01.01.2003-31.12.2010
யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம் 01.01.2011-07.07.2024


(c-735)

யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலக நலன்புரிச்சங்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்பையுடன் நாடு திரும்பிய வீரர்கள்

# பிரதமர் மோடியை சந்தித்தனர்




ரி-20 உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் கோப்பையை வென்ற இந்திய அணி நேற்று அதிகாலை நாடு திரும்பியது. பார்படோஸில் இருந்து சிறப்பு விமானம் மூலம் புறப்பட்ட இந்திய அணி வீரர்கள், டில்லி விமான நிலையம் வந்தனர்.

கோப்பையுடன் நாடு திரும்பிய வீரர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிக்க இரசிகர்கள் அதிகாலை முதலே டில்லி விமான நிலையம் வரத் தொடங்கினர்.

இதனிடையே விமான நிலையம் வந்தடைந்த இந்திய அணியினருக்கு இரசிகர்கள் உற்சாக வரவேற்பை அளித்தனர்.

டில்லி வந்த இந்திய அணி வீரர்கள் பிரதமர் மோடியை அவரது இல்லத்தில் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

அத்துடன் பிரதமர் மோடியுடன் அவர்கள் காலை உணவில் கலந்து கொண்டனர்.

பிரதமர் மோடியை சந்தித்ததைத் தொடர்ந்து இந்திய அணி வீரர்கள் ரி-20 உலகக் கோப்பையுடன் திறந்தவெளி வாகனத்தில் வலம் வந்தனர். (நி-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3159

### சுசில்

தற்கொலை செய்து கொள்ளும் இயந்திரத்திற்கு சுவிட்சர்லாந்து நாடு அனுமதி




உங்க ஊரில தான்டா அது இயந்திரம்
எங்க ஊரில அதுக்கு பேரு கல்யாணம்

### ரதித்தா

சார் என்னோட புருஷன 15 நாளா காணல
எப்படியாவது இன்றைக்கு கண்டுபிடிச்சு தாங்க
ஏம்மா இத்தன நாள் கழிச்சு இன்னைக்கு வந்து கம்பிளையன்ட் செய்யிறாய்?



இன்றைக்கு தான் சார் அவருக்கு சம்பள நாள்

### லோகேஷ்

மொபைல் பார்த்தால் தான்
உலகத்தில் நடக்குறதே தெரியுது



மொபைல்ல கீழ வைச்சால் தான்
வீட்டுல நடக்குறது தெரியுது

### பிறேமினி

தாமதமாக வந்த மாணவனைப் பார்த்து
ஆசிரியர் கேட்டார்
ஏன் லேட்?



மாணவன்: வழியில் ஒரு தகவல் பலகையில் பள்ளிக்கூடம் வருகிறது மெதுவாகச் செல் என எழுதியிருந்தது சார்

### ராகவ்



இதில் ஒரு மோதிரம்
கல்யாணத்திற்கு போட்டதாம்
மற்றதெல்லாம்
மன அமைதிக்காக போட்டதாம்!

### சஞ்சீவன்

ஒவ்வொரு குடும்பத்திலும்







நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மடு திருத்தல இடைத்தங்கல் வீடுகள் நிர்மாண திட்டத்துக்கு இந்தியாவால் மேலதிக நிதி

(கொழும்பு)

மன்னார் மடு திருத்தலத்தில் நிர்மாணிக்கப்படும் குறைந்த செலவிலான இடைத்தங்கல் வீடுகள் திட்டத்துக்கான மேலதிக கொடுப்பனவாக 100 மில்லியன் இலங்கை ரூபாவை வழங்குவதற்கு இந்திய அரசாங்கம் தீர்மானித்த நிலையில் அதற்கான அம்சங்களை முறைமைப்படுத்தும் இராஜதந்திர ஆவணங்கள் இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ.எஸ். சத்யானந்தா ஆகியோரால் கைச்சாத்திடப்பட்டு பரிமாறிக்கொள்ளப்பட்டது.

இத்திட்டத்துக்கான இந்திய அரசின் மொத்த நிதி ஒதுக்கீடானது தற்போது 400 மில்லியன் இலங்கை ரூபாவாக உள்ளது.

இலங்கையில் பொருளாதார நிலைமைகளால் மேலெழுந்த சவால்களுக்கு முகங்கொடுக்கும் வகையில் அபிவிருத்தித் திட்டங்களின் நிர்மாணப் பணிகளுக்கான மூலப்பொருட்களின் விலைகளில் ஏற்பட்டுள்ள கணிசமான மாற்றங்களை கவனத்தில் கொண்டு அதற்கு ஈடுகொடுக்கும் முகமாகவும் தற்போது நடைமுறையில் உள்ள 9 நன்கொடை அடிப்படையிலான அபிவிருத்தித் திட்டங்களை துரிதமாக நிறைவேற்றுவதை இலக்காகக் கொண்டும் அவற்றுக்கு மேலதிக நிதியினை ஒதுக்கீடு செய்வதற்கு இந்திய அரசாங்கம் தீர்மானித்திருந்தது.

மன்னார் மடு திருத்தலத்தின் குறைந்த செலவிலான இடைத்தங்கல் வீடுகள் நிர்மாண திட்டமும் இந்த 9 திட்டங்களில் ஒன்றாகும்.

இந்திய அரசாங்கத்தின் நன்கொடையின் கீழ் 96 இடைத்தங்கல் வீடுகள் மடு திருத்தலத்தில் நிர்மாணிக்கப்படும் நிலையில், அங்கு வருகைதரும் யாத்திரிகர்கள் அவற்றைப் பயன்படுத்த முடியும். (நி-6)


## பொதுக்கூட்ட அறிவித்தல்

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் ஆலயத் தொண்டுகளை சீரமைக்கும் நோக்கிலான கலந்துரையாடல் ஒன்று ஞாயிற்றுக்கிழமை 14.07.2024 காலை 10.00 மணியளவில் ஆலய முன்றலில் இடம்பெறவுள்ளது. அனைத்து உபயகாரர்களையும், தொண்டர்சபை உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

நன்றி

**தர்மகர்த்தாக்கள் சபை,**
**அளவெட்டி கும்பழாவளைப்**
**பிள்ளையார் கோயில்.** (1388)

# Invitation for Bids (IFB)

## Municipal Council - Jaffna

## Security Service for Municipal Council Jaffna

## JMC/PO1/MSO/Sec.Ser/2024-2025

1. The Chairman Regional Procurement Committee (RPC) on behalf of the Municipal Council Jaffna now invites sealed bids from eligible and qualified bidders for Security Service of Municipal Council Jaffna.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall meet the following requirements;
   a. Bidders shall have valid business registration
   b. and approval of the Ministry of Defense to provide security service
4. To be eligible for entering into an agreement and to become the contract effective the bidder shall meet following requirement.
   a. Shall have its registered office or branch in Northern Province
5. To qualify for award of the Contract, bidders shall meet the minimum qualifying criteria if given in Section 2 –Bidding Data.
6. Interested bidders may obtain further information from Municipal Council Jaffna, Point Pedro Road, Nallur, Jaffna and inspect the bidding documents at Municipal Council Jaffna from 9.00 hrs. to 15.00 hrs. on working days.
7. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Commissioner, Municipal Council, Jaffna from 05th July 2024 to 25th July 2024 from 09.00 hrs. to 14.00 hrs. upon payment of a non-refundable fee of Rs.3,500.00 with Tax. The method of payment will be cash.
8. Bids shall be delivered to Jaffna Municipal Council, Point Pedro Road, Nallur, Jaffna on or before 15.00 hrs. on 25th July 2024. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
9. All bids shall be accompanied by a Bid-Security of Rs. 184,000.00

**Chairman,**
**Procurement Committee,**
**Jaffna Municipal Council,**
**Point Pedro Road, Nallur,**
**Jaffna.**

(c-738)

**Date: 05.07.2024**


# இராசிபலன்

05.07.2024
ஆனி 21, வெள்ளிக்கிழமை
அமாவாசை பின்னிரவு 5.05 மணிவரை
திருவாதிரை பின்னிரவு 5.09 மணிவரை
சுபநேரம் 5.57-7.27 மணி வரை
இராகுகாலம் 10.27-11.57 மணிவரை
அமாவாசை விரதம்
சந்திராஷ்டமம்- சுவாதி

**வளவன்**

**மேஷம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவம் ஒன்று இடம்பெறலாம், பகை ஒன்று நட்பாகும் வாய்ப்புண்டு, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**கடகம்** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சயனசுகக் குறைவுகள் ஏற்படலாம், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.

**துலாம்** உறவினர் வழியில் மன நிறைவான செய்தியொன்று வந்து சேரலாம், தொழில் ரீதியில் சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், வெளியூர் பயணங்களால் நன்மையுண்டு.

**மகரம்** பிரியமான சிலரின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு.

**ரிஷபம்** வழிபாட்டில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வாக்கு மேன்மையுண்டு, வருமானம் பெருக வழியமைப்பீர்கள்.

**சிம்மம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், புதிய முயற்சிகள் கைகூடும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும்.

**விருச்சிகம்** பயணங்களால் பலனுண்டு, வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், நிதானத்துடன் நடந்து நிம்மதி காண வேண்டிய நாள், உடல் நலனில் கவனம் தேவை.

**கும்பம்** பிள்ளைகளின் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**மிதுனம்** ஒருவகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயங்கள் ஏற்படலாம், பொது நல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், உறவினர்கள் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம்.

**கன்னி** புதிய திட்டங்கள் தீட்டி தொழிலில் ஆதாயம் காண முற்படுவீர்கள், காலைப்பொழுதே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு, வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**தனுசு** குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், நண்பர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், காரிய அனுகூலமுண்டு.

**மீனம்** தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், புதிய நபர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வழிபாட்டால் வளர்ச்சியைக் கூட்டிக் கொள்வீர்கள், சுப விரயங்கள் அதிகரிக்கும்.

**வீழ்ந்தாலும் வீரன் அடிபணிய மாட்டான்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழு கூட்டம்



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தின் ஜீலை மாத்திற்கான ஒருங் கிணைப்புக் குழுக் கூட்டம் கடற்றொழில் அமைச்சரும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான டக் ளஸ் தேவானந்தாவின் தலை மையில் நேற்று இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் பல்வேறு விடயங்கள் தொடர் பாக ஆராயப்பட்டன.

வேரவில் கிராம அலுவலர் பிரிவில் காற்றாளை மின் உற் பத்தி திட்டம், புலோப்பளை காற்றாளை நிர்மாணத்திற் கான திட்டம், கோவில் வயல் 10MW சூரியசக்தி மூலம் மின் உற்பத்தி திட்டம் ஆகிய மூன்று திட்டங்களின் திட்டமுன் மொழிவுகள் ஒருங்கிணைப் புக்குழு அனுமதிப்புக்காக சமர்ப்பிக்கப்பட்டன.

இவை தொடர்பாக மேலும் பொதுமக்களின் கருத்துக்கள், விடய ஆய்வுகள் தொடர்பான மேலதிக விடயங்களை உள் ளடக்கியதாக அடுத்த கூட்டத் திற்கு சமர்ப்பிக்குமாறு தீர்மா னிக்கப்பட்டது.

மேலும், மத்திய மற்றும் மாகாண அமைச்சுக்களினால் மேற்கொள்ளப்பட்டுவரும் அபி விருத்தி திட்டங்கள், அவற்றின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக கலந்துரையாடப் பட்டது.

இதனைவிட, மாவட்டத்தில் சட்டவிரோத செயற்பாடுகள் குறிப்பாக சட்டவிரோத மணல் அகழ்வு மற்றும் முகமாலை பிரதேசத்தில் பாடசாலை மாண வர்களை இலங்கை போக்கு வரத்து சபை பேருந்துகளில் ஏற்றாமை தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது. (நி-6-316)



இணுவில் கந்தசுவாமி கோவில் தேர்த்திருவிழா நேற்று பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படம்: சிவசாந்தன்)

## முனீஸ்வரர் அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கோட்டை ஸ்ரீ முனீஸ் வரன் தேவஸ்தான மணவா ளக்கோல அலங்கார உற்சவம் நாளை ஆரம்பமாகி தொடர்ந்து 28 நாட்கள் உற்சவங்கள் இடம் பெறவுள்ளது.

எதிர்வரும் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ரதபவனி யும் 31 ஆம் திகதி தீர்த்தமும் இடம்பெறவுள்ளது என ஆலய பரிபாலன சபையினர் அறிவித் துள்ளனர். (நி-6)

## கேள்வி அறிவித்தல்
## நெடுந்தீவு பிரதேச சபை
### சுற்றுலா உட்கட்டமைப்பு மேம்பாட்டுத்திட்டம்-2024

01. சுற்றுலா உட்கட்டமைப்பு மேம்பாட்டுத்திட்டம் 2024 நிதி -அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைத்திட்டங்களிற்கு கொடுப்பனவுக்கென பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
02. தலைவர், உள்ளூர் அதிகாரப் பெறுகைக்குழு, நெடுந்தீவு பிரதேசசபை, அவர்கள் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோருகின்றார்.
03. தேசிய போட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
04. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதிவேலை அமைப்புக்கான இக்ராட் (ICTAD) பதிவு பெற்றிருத்தலும் வேண்டும்.
05. தகைமைத் தேவைப்படுத்தல்கள் கேள்வி ஆவணத்தின் 4 ஆம் பிரிவில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளன. மேலதிக விபரங்கள் கேள்வி ஆவண அட்டவணையில் வழங்கப்பட் டுள்ளன.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், நெடுந்தீவு பிரதேசசபை, பிரதானவீதி, நெடுந்தீவு, (தொலைபேசி: 021 221 5211) இல் இருந்து 05.07.2024 தொடக்கம் 19.07.2024 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் வேலை நாட்களில் காலை 09.00 மணிமுதல் மாலை 14.00 மணிவரை மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
07. மேற்கூறிய இடத்தில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் 05.07.2024 ஆம் திகதியிலிருந்து 19.07.2024 திகதிவரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் கேள்வி ஆவணம் ஒவ்வொன்றிற்கும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.3000/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.
08. கேள்வி இரு பிரதிகளில் சமர்ப்பிக்கப்பட வேண்டும், நேரடியாக அல்லது பதிவுத் தபால் மூலம் செயலாளர், நெடுந்தீவு பிரதேசசபை, பிரதானவீதி, நெடுந்தீவு எனும் முகவரிக்கு 19.07.2024 ஆம் திகதி மாலை 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
09. கேள்வியாளர்களுக்கான முன் கலந்துரையாடல் 12.07.2024 திகதி காலை 10.30 மணிக்கு நெடுந்தீவு பிரதேசசபை அலுவலகத்தில் நடைபெறும்.

| இல. | கேள்வி அடையாள இல | வேலை விபரம் | மதிப்பீடு செலவு (VAT தவிர்ந்த ) (மில்.ரூபாவில்) | ஒப்பந்த காலப்பகுதி | தேவைப்படும் தரம் | விலைமனுவை சமர்ப்பிக்கும் இறுதி திகதியிலிருந்து செல்லுபடியாகும் காலப்பகுதி | | தேவைப்படும் விலைமனுப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | செல்லுபடியாகும் காலப்பகுதி | திகதி | பிணைத் தொகை | செல்லுபடியாகும் காலப்பகுதி |
| 1 | NP/14/41(7)/02/ TIDP/01 | Improvement access road facilities (Queen Tower Road) | 8.47 | 90 நாட்கள் | C7 or Above (Road) | 77 நாட்கள் | 04.10.2024 | 85,000.00 | 01.11.2024 |
| 2 | NP/14/41(7)/02/ TIDP/02 | Establishment of sign boards | 4.23 | 60 நாட்கள் | வியாபார பதிவு சான்றிதழ் | 63 நாட்கள் | 20.09.2024 | 45,000.00 | 18.10.2024 |

**தலைவர்**
**உள்ளூர் அதிகார பெறுகைக்குழு,**
**நெடுந்நதீவு பிரதேச சபை,**
**05.07.2024**

(c-739)

# மருத்துவர்கள் பகிஷ்கரிப்பு நோயாளர்கள் பாதிப்பு



(சாவகச்சேரி)


சாவகச்சேரி ஆதார மருத் துவமனையில் கடமையாற் றும் பெரும்பாலான மருத்து வர்கள் மருத்துவமனையின் வைத்திய அத்தியட்சகருக்கு எதிராக குரல்கொடுத்து நேற்று வியாழக் கிழமை காலை பணிக்கு சமூகமளிக்காத நிலையில் நோயாளர் கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

இது தொடர்பாக மருத்துவ மனையின் வைத்திய அத்தி யட்சகரை தொடர்புகொண்ட போது மருத்துவமனை சேவை அத்தியவசியமானது. எனவே மருத்துவர்கள் தமது சேவை யைப் புறக்கணிப்பதனை ஏற் றுக்கொள்ள முடியாது.

நோயாளர்களது நலன் கருதி தடையின்றி தொடர்ந்து மருத்துவ சேவைகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக தெரி வித்தார். (நி-6-30)

# கேரள கஞ்சா போதை மாத்திரை மீட்பு

(கரணவாய்)



பற்றைக்குள் பதுக்கி வைக் கப்பட்டிருந்த கேரள கஞ்சா, போதை மாத்திரை மற்றும் இலத்திரனியல் தராசு மீட்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறையில் உள்ள இராணுவ புலனாய்வுப் பிரிவி னருக்கு கிடைக்கப்பெற்ற இர கசியத் தகவலுக்கு அமைய நேற்று முன்தினம்புதன்கிழமை (3) மாலை 6.20 மணியளவில் புலோலி விஸ்வகுல ஒழுங் கையில் உள்ள பற்றைப் பகுதியில் சோதனையிட்ட வேளை அப்பற்றைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு கிலோ 200 கிராம் கேரள கஞ்சா, 29 போதை மாத்திரை காட்டுகள் அடங்கிய 290 போதை மாத் திரை மற்றும் இலத்திரனியல் தராசு என்பன மீட்கப்பட்டு பருத் தித்துறை பொலிஸ் நிலை யத்தில் பாரப்படுத்தப்பட் டுள்ளது. (நி-6-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்திரான் ஜனசக்தி தோற்பொருள் உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் (வ-து) பதவி வெற்றிடம் (வெளிவாரியாக)

கீழ் குறிப்பிடும் நிரந்தரப் பதவிகளுக்கு தகுதியானவர்களிடம் இருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பத்தினை 20.00 ரூபா செலுத்தி கடமை நேரத்தில் அந்திரான் ஜனசக்தி தோற்பொருள் உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கத்தில் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை தலைவர், அந்திரான் ஜனசக்தி தோற்பொருள் உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கம், வட்டுக் கிழக்கு, சித்தன்கேணி என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்கவும். விண்ணப்பிக்கும் பதவியினை இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி 19.07.2024 பிற்பகல் 12.00 மணி.**

பதவி :- பொது முகாமையாளர்
சம்பள குறியீட்டு இலக்கம் :- **101/ 08** (சு.நி.இல **01/ 2021)**
சம்பள அளவுத் திட்டம் :-ரூ20665-260X10-280X10-26065 (சு.நி.இல 02/2022)
இத்துடன் கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழுவினால் வழங்கப்படும் சுற்று நிருபங்களிற்கு அமைய படிகளாக ரூ15000/= மேலதிக கொடுப்பனவும் வழங்கப்படும்.

**தகைமைகள் :-**

அ. கூட்டுறவு ஊழியர் 9 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் முகாமை நிலை / மேற்பார்வை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம் /

கூட்டுறவு ஊழியர் 10 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் முகாமை நிலை மேற்பார்வை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப்பட்டம் / அதற்கு சமமான தகைமை. இத் தகைமையானது கணக்கியல்/ வியாபாரப் புள்ளி விபரவியல்/ வியாபாரக் கற்கைகள் தொடர்பான பாடங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்/

இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியின் கணக்கியல்/ முகாமைத்துவம்/ வர்த்தகம் தொடர்பான உயர் தேசிய டிப்போளமா சித்தி

அல்லது

இ.கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்/

க.பொ.த உயர்தரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 05 ஆண்டு கால அனுபவம்.

பதவி :- கணக்குப் பதிவாளர்
சம்பள குறியீட்டு இலக்கம் :- 215/10 (சு.நி.இல 01/2021)
சம்பள அளவுத் திட்டம் :- ரூ19745-225X10-250X10-24495 (சு.நி.இல 02/2022)
இத்துடன் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால் வழங்கப்படும் சுற்று நிருபங்களிற்கு அமைய படிகளாக ரூ15000/= மேலதிக கொடுப்பனவும் வழங்கப்படும்.

தகைமைகள் :-

அ. கூட்டுறவு ஊழியர் 11 ஆவது சம்பளத் திட்டப்பதவியில் கணக்குப் பதிவாளர் /வெளிக்கள உத்தியோகத்தர் / எழுதுநர் / காசாளர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/

கூட்டுறவு ஊழியர் 12 ஆவது சம்பளத் திட்டப்பதவியில் கணக்குப் பதிவாளர்/ வெளிக்கள உத்தியோகத்தர்/ எழுதுநர்/ காசாளர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்

அல்லது

ஆ.இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் கணக்கியலிலான டிப்ளோமா/ இதற்கு சமனான தகைமை/ மாகாண கூட்டுறவுப் பயிற்சி நிறுவனத்தினால்/ தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தினால் (NICD) நடாத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி

அல்லது

இ.கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல் துறைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/

க.பொ.த உயர்தரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம்/ ஒன்றில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல் துறைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்.

பதவி :- உற்பத்தித் தொழிலாளி (02)
சம்பள குறியீட்டு இலக்கம் :- 318/17 (சு.நி.இல 01/2021)
சம்பள அளவுத் திட்டம் :- ரூ16515-130X10-145X10-19265 (சு.நி.இல 02/2022)

இத்துடன் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால் வழங்கப்படும் சுற்று நிருபங்களிற்கு அமைய படிகளாக ரூ15000/= மேலதிக கொடுப்பனவும் வழங்கப்படும்.

தகைமை:-
அ. 05 ஆம் தர கல்விச் சான்றிதழுடன் சிறந்த தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல்.

முக்கிய குறிப்பு :-

- தனிப்பட்ட விண்ணப்பதாரிகளாயின் 18 - 45 வயதுக்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
- சங்கப் பணியாளர்களாயின் வயதெல்லை கணிக்கப்படமாட்டாது.
- சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- சங்கப் பணியாளர்களாயின் கடமையாற்றும் சங்கத்தினூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.
- இப் பதவிகளுக்கு விண்ணப்பம் செய்யும் விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்படும் இடத்து பிணைப் பணம் சங்கத்தில் செலுத்தத் தயாராக இருத்தல் வேண்டும்.

(சி-730)

**தலைவர்,**
**அந்திரான் ஜனசக்தி தோற்பொருள் உற்பத்தி**
**விற்பனையாளர் கூட்டுறவுச் சங்கம், சித்தன்கேணி.** ([illegible] 076 400 5833)

# பாலகதிர்காம திருவிழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஸ்ரீ பாலகதிர்காம தேவஸ்தான வருடாந்த திருவிழா இன்று ஆரம்பம்.

திருவிழாவின் போது தினமும் மாலை 4.30 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகி 6.00 மணிக்கு நிறைவடையும்.

எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தத்திரு விழாவும் 23 ஆம் திகதி மாலை 5 மணிக்கு விஷேச அபிஷேக ஆராதனை களைத் தொடர்ந்து ஆடிவேல் இரத பவனியும் இடம் பெறவுள்ளது என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளார். (நி-6)


**லங்கா மஹால் (PVT) LTD**

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில்
இலவசமாக உங்கள் வீடுகளுக்கே
வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
**0091956615671 9**

WESTERN UNION WU MoneyGram Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
**077 839 3974** (1375)


# நூல் வெளியீடு

**'சுதந்திரத்திற்கு பின்னரான அரசியலமைப்புக்களும் சிறுபான்மையினரின் நிலைமைகளும்'** என்ற சட்டத்தரணி கனக நமநாதன் வீரகேசரி ஞாயிறு இதழில் 2019 ஆம் ஆண்டு எழுதி வெளிவந்த தொடர் கட்டுரைகள் தொகுக்கப்பட்டு நூலாக வெளிவருகின்றது.

இந் நூல் வெளியீடு திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் (Y.M.H.A) 07.07.2024 ஞாயிறு காலை 10.00 மணிக்கு திரு.த.கணநாதலிங்கம் தலைமையில் ஆரம்பமாகிறது.

பிரதம அதிதியாக யாழ்.பல்கலைக்கழக பதிவாளர் திரு.விஸ்வநாதன் காண்டீபன், வெளியீட்டு உரையை இலங்கை சிறுவர் நிதிய நிகழ்ச்சி திட்டப் பணிப்பாளர் கலாநிதி இராஜன் தவசீலன் ஆகியோருடன் நூலாய்வு உரையை வலம்புரி பிரதம ஆசிரியர் திரு.ந.விஜயசுந்தரம் ஆற்றுகின்றார். நூலாசிரியர் சட்டத்தரணி கனகநமநாதனின் ஏற்புரையுடன் வெளியீட்டு விழா முடிவு பெறும்.

(1379)

**மேலதிக விபரங்களுக்கு**
**077 667 5080**


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம் : கேட்டை 8 இல் செவ்
உயரம் : 5'5"
தகைமை/தொழில்: Bsc,IT Instructor
எதிர்பார்ப்பு: தகுதியான பெண். IT field
தொ.இ: B/14625

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 13
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: Diploma in construction technology , TO
எதிர்பார்ப்பு: பட்டதாரி,அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: B/14627

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 15
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: QS, Hardware stores உரிமையாளர்
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம், தகுதியான பெண்
தொ.இ: B/14629

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 20
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: B.Tech, Lab technologist
எதிர்பார்ப்பு: படித்த ஆண்
தொ.இ: G/14636

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 73 8 இல் செவ்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: Laboratory Receptionist
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: G/14637

பிறப்பு: 1999 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 16
உயரம்: 5'
தகைமை/தொழில்: BFA (music)
எதிர்பார்ப்பு: Banker, IT field, Accountant
தொ.இ: G/14638

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
**E-mail:- kalyanamalai.jaffna@gmail.com**
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# வேகமாக பரவும் ஜிகா வைரஸ்!

(டில்லி)

**ஏடிஸ் வகை கொசு மூலம் பரவும் ஜிகா வைரஸ் காய்ச்சல் பரவலால், எச்சரிக்கையாக இருக்குமாறு மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு கடிதம் எழுதியுள்ளது.**



மகாராஷ்டிராவில் ஜிகா வைரல் பரவல் கண்டறியப்பட்டதையடுத்து தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள மாநிலங்களுக்கு சுகாதார அமைச்சகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

குறிப்பாக கர்ப்பிணி பெண்களுக்கு ஜிகா வைரஸ் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால் கர்ப்பிணி பெண்களுக்கு ஜிகா வைரல் உள்ளதா என்று சோதிக்க வேண்டும் என்றும் ஜிகா வைரல் இருந்தால் கருவின் வளர்ச்சியை கண்காணிக்க வேண்டும் என்று மாநில அரசுகளுக்கு மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

ஏனெனில் கர்ப்பிணி பெண்களுக்கு தொற்று ஏற்பட்டால் குறைப்பிரசவத்தில் குழந்தை பிறப்பதற்கும் குறைபாடுகளுடன் குழந்தை பிறப்பதற்கும் வாய்ப்புள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் கருச்சிதைவு ஏற்படுவதற்கும் வாய்ப்புள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

தலைவலி, தோல் வெடிப்பு, காய்ச்சல், மூட்டு வலி உள்ளிட்டவை ஜிகா வைரஸ் தொற்றுப் பாதிப்பின் அறிகுறிகளாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் ஜிகா வைரஸ் பாதிப்பு தீவிரமாக கண்காணிக்கப்படுவதாக மாநில அரசு தகவல் தெரிவித்துள்ளது. (ரி-6)

# தேர்... பத...

(நெதர்... கடந்த... நடைபெ... லுக்கு 2... பிறகு. ... அரசாங்க... கிழமை... ஹூயிஸ்... மனைவி... மாக பத... முன்ன... கௌரவ... கலைத்... அமைச்ச... தொடர்... லாளர்க... சுதந்... (பிவிவி), (என்எஸ்... ஜனநாய... கட்சி (வ...

## இந்தியாவில்

# ஆண்டுக்கு சுமார் 33,000 பேர் காற்று மாசுபாட்டால் உயிரிழப்பு

(டில்லி)

காற்று மாசுபாட்டால் இந்தியாவில் ஆண்டுக்கு 33,000 பேர் உயிரிழப்பதாக தெரியவந்துள்ளது என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தியாவில் 10 நகரங்களில் காற்று மாசுபாடு காரணமாக இந்த உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.

அதன்படி அகமதாபாத், பெங்களூர், சென்னை, டில்லி, ஹைதராபாத், கொல்கத்தா, மும்பை, புனே, சிம்லா மற்றும் வாரணாசி ஆகிய நகரங்களில் இந்த உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.

மேலும் இந்தியாவில் காற்றின் தரம் உலக சுகாதார அமைப்பின் தரத்தை விட அதிகமாக இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ரி-6)


# சீன - இந்திய அமைச்சர்கள் கஜகஸ்தானில் சந்திப்பு

(அஸ்தானா)

சீன வெளியுறவுத்துறை அமைச்சர் வாங்யியும், இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கரும் நேற்று கஜகஸ்தானில் நேரில் சந்தித்து கலந்துரையாடியுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

கஜகஸ்தான் தலைநகர் அஸ்தானாவில் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் 24 ஆவது உச்சி மாநாடு, நேற்று முன்தினம் ஆரம்பமானது.

இந்த மாநாட்டில் பங்கேற்க, இந்திய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் சென்றுள்ளார்.



இந்நிலையில், சீன வெளியுறவுத்துறை அமைச்சர் வாங்யியை, அமைச்சர் ஜெய்சங்கர் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்தியா - சீனா இடையே எல்லை பிரச்சினை நீடித்து வரும் நிலையில் குறித்த இரு நாட்டு அமைச்சர்களும் நேரில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது, இருவரும் எல்லை பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது குறித்து சிறிது நேரம் கலந்துரையாடினர். (ரி-6)

# பாலஸ்தீனத்தில் பரவும் தே... உலக சுகாதார அமைப்பு ...

(காசா)

பாலஸ்தீன பிராந்தியத்தில் மிக ஆபத்தான தோல் நோய் பரவி வருவதாக உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.



இஸ்ரேல் ஹமாஸ் போருக்குப் பிறகு ஏற்பட்ட மோசமான நிலைமைகள் காரணமாக தோல் நோய் பரவுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

முதற்கட்ட விசாரணையில், சுமார் 150,000 பேர் பல்வேறு தோல் வியாதிகளால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் சிரங்கு, சின்னம்மை, பேன், கொப்புளங்கள் ஏற்படும் ஒரு வகை தோல் வியாதி மற்றும் பலவீனப்படுத்தும் சொறி வரை... பரவுவதாக உலக சுகாதார... அமைப்பு உறுதி செய்துள்ளது.

வெறும் தரையில் மண் மீது... படுத்துறங்கும் நிலை இருப்பதால், இதுபோன்ற தோல்... வியாதிகள் ஏற்படு வதாக பெண்... ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

உலக சுகாதார அமைப்பு...

# பிரித்தானிய பொ... மனைவியுடன் வாக்களி...

(லண்டன்)

பிரித்தானியாவில் பொதுத் தேர்தலுக்கான வாக்குப் பதிவின் போது பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக் தனது மனைவியுடன் சென்று வாக்களித்துள்ளதாக அந்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

பிரித்தானியாவில் அடுத்த பாராளுமன்றத்தைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலுக்கான வாக்குப்பதிவு நேற்று நடைபெற்றது.

நாடு முழுவதும் சுமார் 40 ஆயிரம் வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அந்நாட்டு நேரப்படி நேற்றுக் காலை 7 மணிக்கு

வா... நிற... வன... முத... யா... கப்ப... தீர... தே...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## தேர்தல் முடிந்து 220 நாட்களுக்கு பின்னர் பதவி ஏற்ற நெதர்லாந்து அரசாங்கம்



(நெதர்லாந்து)

கடந்த ஆண்டு நவம்பரில் நடைபெற்ற பொதுத் தேர்தலுக்கு 220 நாட்களுக்குப் பிறகு, புதிய நெதர்லாந்து அரசாங்கம் கடந்த செவ்வாய்கிழமை ஹேக்கில் உள்ள ஹுயிஸ்டென் போஷ் அரண்மனையில் அதிகாரப் பூர்வமாக பதவியேற்றது.


முன்னாள் அரசாங்கத்தின் கௌரவமான பதவிவிலகலைத் தொடர்ந்து 16 புதிய அமைச்சர்களும், அதனைத் தொடர்ந்து 13 அரச செயலாளர்களும் பதவியேற்றனர்.

சுதந்திரத்திற்கான கட்சி (பிவிவி), புதிய சமூக ஒப்பந்தம் (என்எஸ்சி), சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்திற்கான மக்கள் கட்சி (விவிடி), மற்றும் விவசாயிகள்-குடிமகன் இயக்கம் (பிபிபி) ஆகிய நான்கு கூட்டணிக் கட்சிகளின் தீவிர பேச்சுவார்த்தைக்குப் பிறகு புதிய அரசாங்கம் உருவாக்கப்பட்டது.

பிவிவி தலைவர் கீர்ட் வில்டர்ஸ் உள்ளிட்ட கூட்டணி தலைவர்கள் யாரும் பிரதமராக வரமாட்டார்கள் என்று ஒப்புக்கொண்டனர்.

எந்த அரசியல் கட்சியிலும் உறுப்பினராக இல்லாவிட்டாலும், அனைத்துக் கூட்டணிக் கட்சிகளாலும் ஆதரிக்கப்படும் ஒரு உயர்மட்ட டச்சு அரசுப் பணியாளர் டிக் ஷூஃப் மே மாதம் புதிய பிரதமராகப் பெயரிடப்பட்டார். Schoof முன்பு ஒரு அரசு ஊழியராக பல்வேறு பதவிகளை வகித்துள்ளார். (நி-6)

## ஜனாதிபதி தேர்தலில் இருந்து விலக மாட்டேன்-பைடன்



(வோஷிங்டன்)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து விலக வேண்டும் என விடுக்கப்படும் வேண்டுகோள்களை ஏற்க மறுத்துள்ள அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தேர்தல் போட்டியை தொடரப் போவதாக குறிப்பிட்டுள்ளார்.

ஜோ பைடன் தனது பிரசார குழுவினர் ஜனநாயக கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆளுநர்களுடனான சந்திப்பின் போது இதனைத் தெரிவித்துள்ளார்.

என்னை எவரும் வெளியே தள்ளவில்லை, நான் வெளியேறப்போவதில்லை இறுதிவரை தேர்தல் போட்டியில் நீடிப்பேன் என ஜோ பைடன் தெரிவித்தார் என அவரது பிரசார குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை ஜனாதிபதி ஜோ பைடன் தேர்தல் போட்டியிலிருந்து விலகுவது குறித்து சிந்திக்கின்றாரா என்ற கேள்விக்கு பதிலளித்துள்ள வெள்ளை மாளிகையின் ஊடக செயலாளர் நிச்சயமாக இல்லை என குறிப்பிட்டுள்ளார்.

ஜனநாயக கட்சியின் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராக போட்டியிடுவதிலிருந்து அமெரிக்காவின் தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடன் விலகிக் கொள்ளவேண்டும் என ஜனநாயக கட்சியின் மூன்றில் ஒருவர் கருதுவது ரொய்ட்டர்ஸ் கருத்துக் கணிப்பின் மூலம் தெரிய வந்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புடனான முதலவாது நேரடி விவாதத்தின் போது ஜோ பைடன் தடுமாற்றத்துடன் காணப்பட்டதை தொடர்ந்து அவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து விலகிக்கொள்ள வேண்டும் என ஜனநாயக கட்சியின் மூன்றில் ஒருவர் கருதுகின்றனர் என ரொய்ட்டர் தெரிவித்துள்ளது.

இதேவேளை பதிவு செய்யப்பட்ட வாக்களர்களில் 40 வீதமானவர்கள் பைடனையும் 40 வீதமானவர்கள் ட்ரம்பினையும் ஆதரிக்கின்றனர் என கருத்துக்கணிப்பின் மூலம் தெரியவந்துள்ளதாக குறிப்பிட்டுள்ள ரொய்ட்டர் நேரடி விவாதத்தின் பின்னர் பைடனிற்கான ஆதரவு வீழ்ச்சியடையவில்லை என்பதை இது வெளிப்படுத்துகின்றது என குறிப்பிட்டுள்ளது. (நி-6)

## ...ம் தோல்நோய் ...ப்பு எச்சரிக்கை



வெளியிட்டுள்ள தகவலின் அடிப்படையில், காசா போர் தொடங்கிய பின்னர் சிரங்கு மற்றும் பேன் காரணமாக 96,417 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.சின்னம்மையால் 9,274 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். தோல் தடிப்புக ளால் 60,130 பேரும் கொப்புளங்களால் 10,038 பேரும் அவதிப்பட்டு வரு கின்றனர்.

முறையான உணவு, ஊட்டச்சத்து இன்றி அவதிப் படும் சிறார்கள் தற்போது தோல் வியாதிகளால் மோச மான நிலையில் பாதிக்கப் பட்டுள்ளனர் என்பது கவலை தரும் விடயமாக உள்ளது என மருத்துவ அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

## ஜப்பானில் நிலநடுக்கம்

(டோக்கியோ)

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நேற்று மதியம் நிலநடுக்கமொன்று பதிவாகியுள்ளது.

இந் நிலநடுக்கம் அந் நாட்டு நேரப்படி நேற்று மதியம் 12.12 மணியளவில், ரிச்டர் அளவு கோலில் 5.4 ஆக பதிவாகியுள்ளது.

50 கிலோமீற்றர் ஆழத்தில் மையம் கொண்டிருந்த இந்த நிலநடுக்கம் கிழக்கு சிபா மாகாணத்திற்கு அப்பால், 35.2 டிகிரி வடக்கு அட்சரேகை மற்றும் 140.5 டிகிரி கிழக்கே தீர்க்கரேகையில் உணரப்பட்டுள்ளது.

டோக்கியோவின் 23 தொகுதிகளிலும் இந்த நடுக்கம் உணரப்பட்டுள்ளதாக ஜப்பான் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேலும், நிலநடுத்தினால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து இதுவரை எந்த தகவலும் வெளியாகவில்லை.

அத்துடன், சுனாமி அச்சுறுத்தல் எதுவும் இல்லை எனவும் ஜப்பான் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. (நி-6)

## ...பொதுத்தேர்தல் ...களித்தார் பிரதமர் ரிஷி

வாக்குப்பதிவு ஆரம்பமான நிலையில், இரவு 10 மணி வரை நடைபெற்றது.

அத்துடன், இவ்வாண்டு முதல் வாக்களிக்க அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

நாட்டின் புதிய அரசைத் தீர்மானிக்கக் கூடிய இந்தத் தேர்தலில், பாராளுமன்ற கீழவையான மக்களவையின் 650 இடங்களுக்கும் புதிய உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

எனவே, 326 தொகுதிகளில் வெற்றிபெற்று பெரும்பான்மையை பெற்றால்த்தான் பிரித்தானியாவில் ஆட்சியமைக்க முடியும்.

இந்தத் தேர்தலில் எதிர்க் கட்சித் தலைவர் கியெர் ஸ்டார்மா தலைமையிலான தொழிலாளர் கட்சிக்கே வெற்றி வாய்ப்பு அதிகம் என்றும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பிரதமர் ரிஷி சுனக் தலைமையிலான கன்சர் வேட்டிவ் கட்சி இந்தத் தேர்தலில் மிகப் பெரிய தோல்வியைச் சந்திப்பார் எனவும் கருத்துக் கணிப்புக்கள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹிருணிகாவின் பிணை கோரிக்கைக்கு சட்டமா அதிபர் எதிர்ப்பு



(கொழும்பு)

மூன்று வருட கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரவை பிணையில் விடுவிக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு ஆட்சேபனைகளை தாக்கல் செய்யவுள்ளதாக சட்டமா அதிபர் கொழும்பு மேல் நீதிமன்றில் அறிவித்தார்.

இந்த பிணை கோரிக்கை நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜா முன்னிலையில் பரிசீலிக்கப்பட்டது.

அங்கு இந்தக் கோரிக்கை தொடர்பில் ஆட்சேபனைகளை சமர்ப்பிக்க சட்டமா அதிபர் எதிர்பார்ப்பதாக தெரிவித்த அரச சட்டத்தரணி எழுத்து மூலம் ஆட்சேபனைகளை தாக்கல் செய்வதற்கு ஒத்திவைக்குமாறும் கோரினார்.

இதன்படி, சட்டமா அதிபருக்கு ஆட்சேபனைகளை சமர்ப்பிக்க அனுமதித்த உயர் நீதிமன்ற நீதிபதி பிணை கோரிக்கையை எதிர்வரும் 11 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உத்தரவிட்டார். (நி -6)

## மின்னல் தாக்கி விவசாயி உயிரிழப்பு

(கொழும்பு)

மொனராகலை பிரதேசத்தில் எத்திமலை பொலிஸ் பிரிவிற்குட்பட்டபகுதியில் உள்ள வயலொன்றில் வேலை செய்து கொண்டிருந்த விவசாயி ஒருவர் மின்னல் தாக்கி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

எத்திமலை பிரதேசத்தைச் சேர்ந்த 50 வயதுடைய விவசாயியொருவரே உயிரிழந்துள்ளார்.

இவர் மேலும் மூன்று நபர்களுடன் இணைந்து வயலில் வேலை செய்து கொண்டிருக்கும் போது கடும்மழை காரணமாக அருகில் இருந்த மரமொன்றிற்கு அடியில் நின்று கொண்டிருந்த போது மின்னல் தாக்கி காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, காயமடைந்தவர் எத்திமலை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (நி-6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 300 | 250-300 | 240 |
| உருளைக்கிழங்கு | 240 | 220 | 220 | 240 |
| பச்சைமிளகாய் | 150 | 160 | 150 | 200 |
| தக்காளி | 650 | 550 | 500 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 150 | 100-120 | 200 |
| கோவா | 300 | 300 | 250 | 300 |
| கரட் | 550 | 600 | 400 | 600 |
| பூசணி | 200 | 200 | 150 | 200 |
| புடோல் | 250 | 200 | 200 | 300 |
| வாழைக்காய் | 200 | 200 | 150 | 200 |
| சின்ன வெங்காயம் | 450 | 250 | 300-500 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 350 | 240 | 200 |
| பாகற்காய் | 800 | 1200 | 700 | 1200 |
| வெண்டைக்காய் | 250 | 200 | 250 | 300 |
| கருணைக் கிழங்கு | 200 | 200 | 150 | 200 |
| பயற்றங்காய் | 200 | 250 | 250-300 | 300 |
| லீக்ஸ் | 500 | 600 | 350 | 600 |
| பீற்றூட் | 550 | 700 | 500 | 600 |
| கறிமிளகாய் | 600 | 750 | 400 | 700 |
| முருங்கைக்காய் | 800 | 700 | 400-500 | 800 |
| போஞ்சி | 700 | 700 | 350 | 800 |
| கத்தரிதம்புள்ள | 250 | -- | -- | 220 |
| கீரை - 1 பிடி | 70 | 50 | 80 | 80 |
| தேசிக்காய் | 900 | 800 | 600-700 | 800 |
| தேங்காய் (ஒன்று) | 110 | 80-120 | 60-100 | 80-120 |
| இராசவள்ளி | 500 | 500 | 300 | 500 |
| வெங்காயப்பூ | 350 | 400 | -- | 400 |
| முள்ளங்கி | 200 | 200 | 300 | 300 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 30 | 60 |
| வல்லாரை | 45 | 50 | 100 | 80 |
| ஈரப்பலா | 150 | 80 | 80 | 100 |

## இன்று ஒரு தகவல் 173



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# நீச்சல்

உங்களுக்கு குழந்தை பிறந்து ஆறு மாதம் ஆகிவிட்டதாமே. அது தான் கேள்விப்பட்டு பார்த்து விட்டுப் போகலாம் என்று வந்தேன். குழந்தை எங்கே? தொட்டிலிலே தூங்குகின்றதா? என்று கேட்டார் ஒருவர். இல்லை அது நீச்சல் பயிற்சிக்காக போயிருக்கின்றது என்றார் இன்னொருத்தர். இதை கேட்ட உடனே நீங்கள் ஆச்சரியப்படலாம். இது சாத்தியமா என்று நினைக்கலாம். ஆறு மாதக் குழந்தைக்கு நீச்சல் பயிற்சியா? ஆமாம் சோவியத் ரஷ்யாவிலே அப்படி தான் நடக்கின்றது. அவர்கள் எல்லாம் சின்ன வயதிலேயே பெரிய நீச்ல் வீரர்களாக ஆகிவிடுவார்களாம். ஒலிம்பிக்லேயும் நீச்சல் ஒரு முக்கியமான போட்டியாகி விட்டது.

1896 ஆம் ஆண்டிலிருந்து தான் நீச்சல் விளையாட்டையும் ஒலிம்பிக்கிலே சேர்த்திருக்கிறார்கள். எங்களிலும் நீச்சல் தெரியாவர்கள் அதை கற்றுக்கொள்வது நல்லது. ஒலிம்பிக்கிலே கலந்து கொள்ள வேண்டும் என்பதற்காக நான் அந்த யோசனையைச் சொல்லவில்லை. தப்பித்தவறி எங்காவது தண்ணீரிலே விழுந்து விட்டால் தப்பித்து கரைக்கு வந்து சேர்வதற்காவது அது உபயோகமாக இருக்குமே. உடம்பு எடை குறைந்து அழகாகவும் சுறுசுறுப்பாகவும் இருக்க வேண்டும் என்று நினைக்கின்றவர்கள் நீச்சல் பழகலாம். நீச்சல் அடிக்கிற போது உடல் முழுவதும் ஒரு நல்ல பயிற்ச்சி கிடைக்கிறது.

முக்கியமாக உடம்பிலே இரத்த ஓட்டம் சரியாக இருப்பதற்கு இது மிகவும் உதவி. எங்கள் உடம்பிலே ஏதாவது ஒரு சில இடங்களிலே இரத்தம் சரியாக பாயாமல் இருந்தால் அதனாலே சில பிரச்சனைகள் வரும். அப்படிப்பட்ட பிரச்சினைகள் வராமல் இருப்பதற்கு நீச்சல் பயிற்சி மிகவும் நல்லது. எங்கள் உடலிலே ஏதாவது ஒரு இடங்களிலே இரத்தம் சரியாகப் பாயாமல் இருந்தால் அதனாலே சில பிரச்சினைகள் வரும். அப்படிப்பட்ட பிரச்சினைகள் எல்லாம் வராமல் இருப்பதற்கு நீச்சல் பயிற்சி மிகவும் நல்லது. ஆண், பெண் இரண்டு பேருக்குமே உடற்கட்டு நன்றாக அமைவதற்கு இது மிகவும் உதவியாக இருக்கும்.

எந்த உடம்பு வலியாக இருந்தாலும் சரி, முதுகு வலியாக இருந்தாலும் சரி சிறிது நேரம் தண்ணீரிலே இறங்கி நீச்சல் அடித்தால் வலி பறந்து போய்விடும். வயிற்றுக்கோளாறு சரியா போய்விடும். சிறிது நேரம் நீச்சல் அடித்தால் நல் பசி எடுக்க ஆரம்பித்து விடும். என்ன காரணம் என்று நினைக்கின்றீர்கள். வயிற்றிலே தண்ணீர் அழுத்துகிறல்லே அதனால் செரிமான உறுப்புக்கள் எல்லாம் நன்றாக வேலை செய்ய ஆரம்பித்து விடும். தண்ணீர் எங்கள் தோல் மேலே தொடர்ந்து ஒரு அழுத்தத்தை கொடுப்பதனாலே தோலுக்கு ஒரு பளபளப்பு கிடைக்கின்றது என்று வேற சொல்கிறார்கள்.அப்புறம் என்ன? இவ்வளவு சௌகரியம் இருக்கின்ற போது இந்த பயிற்ச்சியை எதற்கு விட்டுவைக்க வேண்டும். துணிந்து தண்ணீரிலே இறங்க வேண்டியது தானே.

நான் கூட ஒருவரைப் பார்த்து சொன்னேன் நீச்சல் கற்றுக் கொள்ளுங்கள் சார் என்று அதற்கு அவர் ஏற்கனவே வாழ்க்கையிலே எதிர் நீச்சல் போட்டுக் கொண்டு தானே சார் இருக்கின்றேன். இது வேற தனியான எதற்கு என்றார். அவர் ஏதோ கஷ்டத்திலே அப்படி சொல்கின்றார் வேறு ஒன்றுமில்லை.

அமெரிக்காவிலே எல்லாம் 92 வருடத்திற்கு முன்பு இருந்தே (1900 ஆம் ஆண்டு முதல்) பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் நீச்சல் கலையை ஒரு பாடமாகவே சேர்த்திருக்கின்றார்களாம். அதற்காக பாடசாலையிலே நீச்சல் குளங்கள் எல்லாம் கட்டி வைத்திருக்கிறார்களாம். மாணவர்கள் எல்லாம் அதிலேயும் தேர்ச்சி பெற வேண்டும் அப்போது தான் வெற்றி.

மற்ற பாடங்களிலே பார்த்து எழுதி விடலாம் என்று தைரியமாக இருப்பவர்கள் கூட நீச்சல் கலையை காப்பி அடிக்க முடியாது. பயிற்ச்சி இருந்தால்த்தான் வெற்றி . விலங்குகளுக்கெல்லாம் நீச்சல் இயற்கையாகவே தெரியும். ஒரு நாய்க்குட்டியை தூக்கி தண்ணீரிலே போடுங்கள். அது நீச்சலடித்து கரைக்கு வந்து சேர்ந்து விடும். அதெல்லாம் எங்கே பழகியதோ நீச்சல் அடிக்க? மனிதன் மட்டும் தான் அதை கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. அதனாலே ஒரு மனிதனுக்கு நீச்சல் தெரியுமா என்பதனை அவனிடம் கேட்டுத் தான் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. அவனை தண்ணீரிலே தூக்கிப் போட்டு பரிசோதனை செய்து பார்க்கக் கூடாது. அப்படி செய்தால் நீச்சல் தெரிந்தவன் கரையை அடைந்து விடுவான். நீச்சல் தெரியாதவன் தரையைத் தேடி போய்விடுவான். கரைக்கு வந்து சேர்பவன் உங்களையும் சும்மா விடமாட்டான்.

இப்போது கடைசியாக இன்று ஒரு தகவல் வேடிக்கையாக எதையாவது சம்பிரதாயப்படி சொல்லி முடித்தாக வேண்டும். கைவசம் ஒன்று தயாராக இருக்கிறது. ஏதோ ஒரு பத்திரிகையில் படித்தது தான். இருந்தாலும் அதை சொல்வது கொஞ்சம் பயமாக இருக்கிறது. எங்கள் ஊர் பெண்மணிகள் சண்டைக்கு வந்தாலும் வந்து விடுவார்கள். ஏற்கனவே இது மாதிரி இரண்டு மூன்று தடவை நடத்திருக்கிறது. அதனாலே ஒரு விடயத்தை எச்சரிக்கையாக முன் கூட்டியே சொல்லிவிடுகின்றேன். நன்றாக காதிலே வாங்குங்கள். இப்போது நான் சொல்லப்போவது வெளிநாட்டிலே நடந்த ஒரு சம்பவம். எங்கள் ஊர் சம்பவம் இல்லை. என்ன சரி தானே? இப்போது விடயத்திற்கு வருகிறேன்.

ஒரு கணவன், மனைவி, பிள்ளைகள் மூன்று பேரும் ஒரு நீச்சல் குளத்துக்கு போனார்களாம். குழந்தை நானும் குளத்திற்குள்ளே இறங்குவேன் என்று அடம்பிடிக்க ஆரம்பித்தது. அந்த அம்மா மிகவும் கண்டிப்பாக நீயெல்லாம் குளத்ததலே இறங்கக் கூடாது என்று சொல்லி விட்டார்கள். அப்பா மட்டும் இறங்கலாமா அவரை ஒன்றும் சொல்ல மாட்டீர்களா என்றது குழந்தை. அதற்கு அந்த அம்மா அவர் காப்புறுதி செய்து இருக்கின்றாரே அப்படி என்றார்களாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேருந்து சேவையை ஏற்படுத்தி தாருங்கள்

## மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி கண்ணகை புரத்திற்கு பேருந்து சேவை நடத்துமாறு அக்கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

350 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்ற அக் கிராமத்தில் 2010 ஆம் ஆண்டின் பின்னர் பேருந்து சேவைகள் இடம் பெறுவதில்லை எனவும் இதன் காரணமாக அக்கராயன் மகா வித்தியாலயத்திற்கு வருகை தரும் மாணவர்கள் 8 கிலோமீற்றர் தூரம் வரை நடந்து செல்ல வேண்டி உள்ளது.

அத்துடன் இதனை விட அக்கராயன் பிரதேச மருத்துவமனைக்கு இக் கிராமத்தில் இருந்து மக்கள் 10 கிலோ மீற்றர் தூரம் பயணிக்க வேண்டி நிலையில் மக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இது குறித்து சம்பந்தப்பட்ட தரப்புக்கள் நடவடிக்கை எடுத்து குறித்த பேருந்து சேவையை முன்னெடுக்க வேண்டும் என கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (நி-6-350)

# புதுக்குடியிருப்பில் யுத்திய நடவடிக்கை



- 7 சந்தேக நபர்கள் கைது
- 43 லீற்றர் கசிப்பு மீட்பு

(நெளுக்குளம்)

புதுக்குடியிருப்புப் பகுதியில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து நடத்திய யுத்திய சுற்றிவளைப்பில் பல குற்றங்களுடன் தொடர்புடைய 7 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் கசிப்பும் மீட்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு 9 ஆம், 10 ஆம் வட்டார பகுதிகளில் பொலிஸ்மா அதிபரின் யுத்திய நடவடிக்கைக்கு அமைவாக புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.பி. ஆர். ஹெரத் தலைமையிலான பொலிஸார் இராணுவத்துடன் இணைந்து நேற்றுக்காலை 5 மணி தொடக்கம் ஆறு மணி வரை நடாத்தப்பட்ட சுற்றிவளைப்பில் திறந்த பிடியாணையில் இருவரையும், பொலிஸாரினால் ஒருநாள் பிணையில் விடுவிக்கப்பட்ட 3 நபர்களும், 43 லீற்றர் கசிப்பும் திருகோணமலையை சேர்ந்த பல குற்றங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இருவருமாக எழுவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சுற்றிவளைப்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி-6-299)

# நீர்ப்பாசன வாய்க்கால் வீதியினை புனரமையுங்கள்

(அக்கராயன்)

முல்லைத்தீவு அம்பலப் பெருமாள் குளத்தின் 17 காணிகளுக்கான நீர்ப்பாசன வாய்க்கால், வீதியினை புனரமையுங்கள் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

1968 ஆம் ஆண்டு அம்பலப் பெருமாள்குளம் குடியேற்றத்திட்டம் உருவாக்கப்பட்டதில் இருந்து ஐந்தாம் வாய்க்காலில் இருந்து 82 ஆம் இலக்க காணிவரை பயிர்ச் செய்கையில் விவசாயிகள் ஈடுபட முடிந்தது.

2010 மீள்குடியேற்றத்தின் பின்னர் ஆற்றினை கடந்து செல்லக் கூடிய வகையில் பாதை உருவாக்கப்பட்டதன் காரணமாக 83 ஆம் இலக்க காணியில் இருந்து 90 ஆம் இலக்க காணி உட்பட 17 காணிகளில் விவசாயிகள் பயிர்ச் செய்கைகளில் விவசாயிகள் ஈடுபட்டாலும் 17 காணிகளுக்கான வீதியோ நீர்ப்பாசன வாய்க்கால்களோ புனரமைக்கப்படாமல் உள்ளன.

இதன் காரணமாக தமது காணிகளில் இருந்து நெல் மூடைகளை வீடுகளுக்கு எடுத்து வருவதில் கூட விவசாயிகள் சிரமங்களை எதிர் கொண்டுள்ளனர்.

இந் நிலையில் 5 ஆம் வாய்க்கால் வீதியினை முழுமையாக புனரமைத்து 17 காணிகளுக்கான நீர்ப்பாசன வசதியினையும் மேற்கொள்வதற்கும் உரிய தரப்பினர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-6-350)



மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர் னாண்டோ ஆண்டகை நேற்று முன்தினம் மன்னார் மாவட்ட பொது மருத்துவமனைக்கு தேவையான மருத்துவ உபகரணங்களை நன் கொடையாக வழங்கி வைத்தார்.

(படம்- ஜோசப்நயன்)

# வாகனத்தில் கடத்தப்பட்ட 9 தேக்க மரக்குற்றிகள் மீட்பு

## சாரதி கைது



(நெளுக்குளம்)

சூட்சுமமான முறையில் ஹயஸ் ரக வாகனத்தில் மரக்கடத்தலில் ஈடுபட்ட போது வாகனம் விபத்திற்குள்ளாகிய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உடையார் கட்டுப் பகுதியில் தேக்கமரக்குற்றிகளை கடத்தி வேகமாக சென்ற ஹயஸ் வாகனம் ஒன்று புதுக்குடியிருப்பு - பரந்தன் வீதியில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை நேர வகுப்பு முடிந்து வீதியால் சைக்கிளில் பயணித்த மாணவன் மீது மோதி விபத்தினை ஏற்படுத்தியுள்ளது.

இதன்போது ஹயஸ் ரக வாகனத்தில் சட்ட விரோதமான முறையில் மரங்கள் ஏற்றி செல்லப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. வாகனத்திற்குள் தேக்க மரக்குற்றிகள் 9 காணப்பட்டுள்ளன. இது புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் இருந்து யாழிற்கு கடத்தி செல்லப்பட்ட மரக்குற்றிகள் என பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

வாகன விபத்தில் படுகாயமடைந்த உடையார் கட்டு தெற்குப் பகுதியினை சேர்ந்த 17 வயதுடைய மாணவன் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவத்தில் மரக்கடத்தலில் ஈடுபட்ட யாழைச் சேர்ந்த ஹயஸ் வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போது சந்தேக நபரை எதிர்வரும் 16.07.2024 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்று உத்தரவிட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணையினை புதுக்குடியிருப்பு பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-6-299)

# தேராவில் விவசாய பண்ணையில் இடம்பெற்ற வயல் விழா

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு தேராவில் பகுதியில் அமைந்துள்ள விவசாய பண்ணையில் வயல் விழா நேற்று முன்தினம் இடம் பெற்றது.

இதன்போது சிறுபோகத்தில் உளுந்து பயிற்செய்கையில் ஏற்படும் சித்திர வடிவ வைரஸ் நோய் தாக்கம் தொடர்பாக எவ்வாறான மாற்று நடவடிக்கைகளை கையாளலாம் என்பது தொடர்பாக செய்கை முறை விளக்கம் வழங்கப்பட்டதுடன் இங்கே மேற்கொள்ளப்பட்ட உளுந்து பயிர்ச் செய்கை தொடர்பாக செயன்முறை விளக்கம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருந்தது.

குறித்த விழாவில் மாகாண விவசாய பணிப்பாளர் செந்தில்குமரன் சுகந்தி, மாவட்ட பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் யாமினி சசீலன் உள்ளிட்ட மாகாண அதிகாரிகள் மற்றும் முல்லைத்தீவு விவசாய திணைக்கள அதிகாரிகள் விவசாயிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (நி-6-299)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 3

காவியத் தொடர்

527





தடைகள் இல்லாத இடங்களில் ஓடவும் செய்தாள். நேரே கோடிக்கரைக் குழகர் கோயிலைக் குறி வைத்துக்கொண்டு போனாள். அவள் கோயில் வாசலை அடைந்ததற்கும், குருக்கள் சுவாமி சந்நிதியின் கதவைப் பூட்டுவதற்கும் சரியாக இருந்தது.

அக்கம் பக்கம் பார்த்து, வேறு யாரும் இல்லை என்று தெரிந்து கொண்டாள். கதவைப் பூட்டிவிட்டுத் திரும்பிய குருக்கள் எதிரில் போய் நின்றாள்.

குருக்கள் அவளை அந்த நேரத்தில் பார்த்துச் சிறிது வியப்படைந்தார். அவளுடைய சுபாவத்தை நன்கு அறிந்தவராயிருந்தும் கூடக் கொஞ்சம் திடுக்கிட்டுத் திகைத்துப் போய் விட்டார்.

“நீயா, பூங்குழலி! வேறு யாரோ என்று பார்த்தேன். கோடிக்கரை முழுதும்தான் ஒரே அமர்க்களப்படுகிறதே எங்கே அம்மா, உன்னைக் கொஞ்ச நாளாகக் காணோம்? இவ்வளவு தடபுடலிலும் உன்னைப்பற்றித் தகவல் இல்லையே என்று இன்று சாயங்காலம் கூட யோசித்தேன்” என்றார்.

“வெளியூருக்குப் போயிருந்தேன். சுவாமி! ஏதோ அமர்க்களமாயிருக்கிறதே யென்றுதான் உங்களிடம் விசாரிக்கலாம் என்று வந்தேன். கடற்கரையெல்லாம் நிற்பவர்கள் யார்?” என்று பூங்குழலி கேட்டாள்.

“உனக்கு ஒன்றுமே தெரியாதா? வீட்டுப் பக்கம் போகவில்லையா?”

“வீட்டுப் பக்கம் போனேன். அங்கே யார் யாரோ கூட்டமாயிருக்கவே திரும்பி விட்டேன். புது மனிதர்களைக் கண்டால் எனக்குப் பிடிக்காது என்றுதான் உங்களுக்குத் தெரியுமே? வந்திருப்பவர்கள் யார்?”

“பெரிய பழுவேட்டரையர் வந்திருக்கிறார். அவருடைய இளையராணி வந்திருக்கிறாள். அவர்களுடைய பரிவாரங்கள் வந்திருக்கிறார்கள். இன்னும் காஞ்சிபுரத்துப் பார்த்திபேந்திர பல்லவனாம்! அவனும் வந்திருக்கிறான். வெறுமனே வரவில்லை, பயங்கரமான செய்தியுடன் வந்திருக்கிறான். உனக்கு அதுகூடத் தெரியாதா, பூங்குழலி?”

“அது என்ன பயங்கரமான செய்தி? எனக்கு ஒன்றுமே தெரியாதே?”

“அந்தப் பாவியினுடைய கப்பலில் இளவரசர் பொன்னியின் செல்வரும் வந்தாராம். வழியில் சுழற்காற்று அடித்ததாம்.

யாரையோ காப்பாற்றுவதற்காக இள வரசர் கடலில் குதித்து விட்டாராம்! பிறகு அகப்பட வேயில்லையாம்! ஒருவேளை இந்தக் கடற்கரையில் வந்து ஒதுங்குவாரோ என்று பார்ப்பதற்காகத்தான் பழுவேட்டரையரின் ஆட்கள் கோடிக்கரையெங்கும் அலைகிறார்கள். ஏன் அவருடைய இளையராணி கூட அலைகிறாள். சற்று முன்னால் இங்கேகூட அந்த அம்மாள் வந்திருந்தாள். பூங்குழலி! பழுவூர் இளையராணியைப் பற்றி ஜனங்கள் என்னவெல்லாமோ பேசிக் கொள்கிறார்கள். அதெல்லாம் சுத்தத் தவறு! நம் இளவரசருக்கு நேர்ந்த கதியைக் குறித்து அந்த அம்மாள் எப்படித் துடிதுடிக்கிறாள் தெரியுமா?”

“அப்படியா குருக்களய்யா? பழுவூர் ராணியின் நல்ல குணத்தைப் பற்றித் தாங்கள் சொல்வது எனக்குச் சந்தோஷமாயிருக்கிறது. ஆனால் இங்கே எதற்காக அந்த ராணி வந்தாளாம்?”

“இளவரசர் எப்படியாவது உயிரோடு அகப்படவேண்டும் என்று குழகரைப் பிரார்த்தித்துக் கொள்வதற்காக வந்தாளாம். உன்னைப் போல் எல்லோரும் கல்நெஞ்சு படைத்தவர்களாயிருக்கிறார்களா? இளவரசரைப் பற்றிய பயங்கரச் செய்தி கேட்டுக்கூட நீ துளிக்கூடக் கலங்கவில்லையே?”

“நாம் கலங்கி என்ன பயன் சுவாமி? எல்லாம் விதியின் படி நடக்கும் என்று நீங்கள் எத்தனையோ தடவை சொல்லியிருக்கிறீர்களே.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## ஒட்டகத்தைக் கொன்ற காகம்

ஒரு மிகச்சிறிய காட்டில் மதோற்கடன் என்ற பெயரை உடைய சிங்கராஜா தனக்கு மந்திரிகளாக நரி, புலி, காகம் ஆகிய மூன்றையும் வைத்துக்கொண்டு அரசாட்சி நடத்தி வந்தார். ஒரு நாள் அந்தக் காட்டு வழியாக வழி தவறி ஓர் ஒட்டகம் வந்தது.

காகம் ஒட்டகத்தைப் பார்த்து அதிகாரமாக யார் நீ என்று கேட்டது. ஒட்டகம் பயந்து போய் வழிதவறி இந்தக் காட்டுக்குள் வந்து விட்டேன் தயவு செய்து என்னைக் காப்பாற்றுங்கள் என்று



காகத்திடம் கேட்டது.

உடனே காகம் ஒட்டகத்தை சிங்கராஜாவிடம் அழைத்துச் சென்றது. சிங்கராஜா! ஒட்டகத்திடம் இனி நீ இந்தக் காட்டில் வசிக்கலாம் என்றும், உன்னை என் மந்திரிகளுள் ஒருவராக நான் சேர்த்துக் கொள்கிறேன் என்றும், இனி மேல் உன்னுடைய பெயர் மந்தானகன் என்றும் பெயர் வைத்தது. ஒரு நாள் சிங்கராஜாவுக்கு உடல் நலம் சரியில்லை. இன்று நீங்கள் நால்வரும் சென்று வேட்டையாடி எனக்கு உணவு கொண்டு வாருங்கள்.

நான் உண்ட பின்னர் மீதமுள்ள உணவினை நீங்கள் உண்ணுங்கள் என்று கட்டளையிட்டது. நான்கும் ராஜாவுக்கு உணவு தேடி காட்டுக்குள் அலையோ அலை என்று அலைந்தன. ஆனால் ஓர் இரையும் அகப்படவில்லை.

உடனே, காகம் ஒரு திட்டம் போட்டது. இந்த ஒட்டகம் சைவம். நாம் ஏன் இந்த ஒட்டகத்தையே இன்றைய இரையாக வைத்துக் கொள்ளக் கூடாது? என்று யோசித்தது. பின் ஒட்டகத்தை மட்டும் ஒரு வேலை கொடுத்து தனியே அனுப்பிவிட்டு காகம், நரியிடமும் புலியிடமும் தன் திட்டத்தைக் கூறியது. ஒட்டகம் திரும்பி வருவதற்குள் காகமும் நரியும் புலியும் சிங்கராஜாவிடம் சென்றன. ராஜா! இன்று இந்தக் காட்டுக்குள் எங்கு தேடியும் எந்த இரையும் கிடைக்க வில்லை என்றது காகம்.

மேலும் கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு யாராவது நெய் தேடுவார்களா? என்றது காகம். அந்த வெண்ணெய் வேறு யாருமில்லை நமது புதிய மந்திரியான ஒட்டகம் தான் அது! என்றது காகம். ஆ! அது எப்படி முடியும்? அது என்னுடைய அடைக்கலப் பொருள் என்றது சிங்கம்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

புரிந்துகொள்ளாதபோதும் பொறாமைப்படும் போதும் மனிதன் மற்றவனை முட்டாளாகக் கருதி விடுகிறான். – சாக்ரடீஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## புனிதமான சேவையை களங்கப்படுத்தினால்...

கொக்குவில் இந்துக் கல்லூரியில் பத்து ஆண்டுகள் ஆசிரியராகக் கடமையாற்றுகின்ற வாய்ப்பு எமக்குக் கிடைத்தது.

அப்போது பிரபலமான கணித ஆசிரியர் க.வேலாயுதம் அவர்கள் அக்கல்லூரியில் கற்பித்துக் கொண்டிருந்தார்.

அவர் அடிக்கடி சொல்லுகின்ற கதை இது.

தந்தை செல்வநாயகமும் சட்டமேதை ஜி.ஜி.பொன்னம்பலமும் அரசியல் எதிரிகள்.

ஜி.ஜி.பொன்னம்பலத்தின் ஆதரவாளர் ஒருவர் அவரிடம் சென்று, ஐயா! தந்தை செல்வநாயகத்தை ஊழல் செய்பவர் என்று பிரசாரம் செய்வோமா? எனக் கேட்டார்.

அவ்வளவுதான். கேட்டவரின் கன்னத்தில் ஜி.ஜி.பொன்னம்பலம் பளார் என்று ஓர் அறைவிட்டார்.

அடி விழுந்ததும் அந்த ஆதரவாளர் திகைத்து நின்றார்.

அந்த இடத்தில், ஜி.ஜி.பொன்னம்பலம் கூறுகிறார்; தந்தை செல்வநாயகம் தனது சொத்துக்களை தமிழ் இனத்துக்காக விற்றுக் கொடுத்தவர். அவரைப் பார்த்து ஊழல் வாதி என்று கூறினால் அதைவிட்ட மாபாவம் இந்த உலகில் வேறு எதுவுமாக இருக்க முடியாது என்று.

அவர் கூறிய அந்தக் கதையை நாம் இப்போதும் நினைப்பதுண்டு.

ஆம், எதிரியாக இருந்தாலும் ஒரு புனிதமானவரை களங்கப்படுத்தக்கூடாது.

அவ்வாறு களங்கப்படுத்தினால், அது ஏதோவொரு வடிவில் நம்மைச் சூழ்ந்து கொள்ளும்.

இதை நாம் கூறும்போது எதிர்க்கருத்துக்கள், உடன்படாத சிந்தனைகள் இருக்கலாகாது என்று எவரும் பொருள் கொள்ளக் கூடாது. கருத்துக்கள், சிந்தனைகள், செயற்பாடுகள் ஆளிடை வேறுபடலாம்.

ஆனால் அவை அனைத்தும் தர்மத்தின் வழி நின்று முன்வைக்கப்பட வேண்டும்.

அதிலும் அரச நிர்வாகம் இது விடயத்தில் ஏனோதானோ என்று நடந்து கொள்ளுமாயின், அது நல்லவர்களை வேதனைப் படுத்திவிடும்.

ஓர் அரச நிர்வாகம் நிலைமைகளை நிதானமாகக் கையாள வேண்டும். அதிலும் பொறுப்பு வாய்ந்த பதவிகளில் இருப்பவர்கள் நடுநிலை நின்று சிந்திக்க வேண்டும்.

எழுந்தமானமாக செய்திகளை வெளிப்படுத்தும்போது, அதன் விளைவு என்னவாக இருக்கும் என்பதை நாம் நேற்றும் இன்றுமாக அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம்.

ஆகையால் எதிலும் நிதானத்தோடு நாம் அனைவரும் நடந்து கொள்ள வேண்டும். அந்த நிதானம் மற்றவர்களையும் நம்மையும் பாதுகாக்கும். அனைவரையும் அமைதிப் படுத்தும்.

அரச பரிபாலனம் இதைச் செய்யத் தவறும்போது, இஃது இனவாதமோ மதவாதமோ என்ற சிந்தனை உருவாகும்.

இதை நாம் கூறும்போது முறைப்பாடுகள் விசாரிக்கப்பட வேண்டும். அவை உரியவாறு கையாளப்பட வேண்டும். அதிலிருந்து உண்மை கண்டறியப்பட வேண்டும் என்பது மிகவும் முக்கியமானது.

அதற்காக, புனிதமான சேவையாளர்களைக் களங்கப்படுத்துவதை நோக்காகக் கொண்டு செயற்பட்டால், அதை இறைதர்மம் ஒரு போதும் மன்னிக்காது. இது சத்தியமான உண்மை.

# அரசின் மறுசீரமைப்புக்களின் பிரதிபலிப்பே பிணைமுறிதாரர்களுடனான இணக்கப்பாடு

## நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் பெருமிதம்

உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களுக்கு அமைவாக அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட செயற்திறன்மிக்க பொருளாதார மற்றும் ஆட்சியியல் மறுசீரமைப்புக்களின் பிரதிபலிப்பாகவே சர்வதேச பிணைமுறிதாரர்களுடன் எட்டப்பட்டிருக்கும் கடன்மறுசீரமைப்பு இணக்கப்பாட்டைக் கருதமுடியும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

கடன் ஸ்திரத்தன்மை குறித்த சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமைவாக இலங்கைக்கும் சர்வதேச பிணைமுறிதாரர் குழுவினருக்கும் இடையில் கடன் மறுசீரமைப்பு தொடர்பான இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

இதுகுறித்து தனது "எக்ஸ்" தளப்பக்கத்தின் ஊடாக அறிவித்துள்ள நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான்சேமசிங்க, "கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சர்வதேச பிணைமுறிதாரர் குழுவுடன் இணக்கப்பாடொன்றை எட்டியிருப்பதன் மூலம், அக்குழுவினருடனான பேச்சுவார்த்தைகளை இலங்கை வெற்றிகரமாக முடிவுக்குக்கொண்டு வந்திருக்கின்றது என்பதை அறியத்தருவதில் மகிழ்ச்சியடைகிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

இந்த இணக்கப்பாட்டின்படி 37 பில்லியன் டொலர் பெறுமதியான மொத்த சர்வதேசக் கடன்களில் 12.5 பில்லியன் டொலர் பெறுமதியான சர்வதேச பிணைமுறிகள் மறுசீரமைக்கப்படும் என சுட்டிக்காட்டியுள்ள அவர், நாட்டின் கடன் ஸ்திரத்தன்மையை மீளுறுதிப் படுத்துவதை முன்னிறுத்தி தாம் முன்னெடுத்துவரும் நடவடிக்கைகளில் இந்த இணக்கப்பாடு மிகமுக்கியமானதோர் நகர்வாகும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

"சர்வதேச பிணைமுறிதாரர்களுடன் எட்டப்பட்டிருக்கும் இணக்கப்பாடு கடன் ஸ்திரத்தன்மை தொடர்பான அடைவு மட்டத்தையும், நிபந்தனைகளையும் பூர்த்திசெய்யும் வகையில் அமைந்திருப்பதை உறுதிப்படுத்துவதற்கு உத்தியோகபூர்வ கடன்வழங்குனர் குழுவும், சர்வதேச நாணய நிதியமும் இதற்கு ஒப்புதல் அளிக்கவேண்டியுள்ளது" எனவும் இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும் பொருளாதார மீட்சியையும், மீள் ஸ்திரத்தன்மையையும் நோக்கிய பயணத்தில் இது மிக முக்கியமானதோர் அடைவாகும் எனக் கூறியிருக்கும் அவர், "உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களுக்கு அமைவாக அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட செயற்திறன்மிக்க பொருளாதார மற்றும் ஆட்சியியல் மறுசீரமைப்புக்களின் பிரதிபலிப்பாக இந்த அடைவைக் கருதமுடியும்.

சிறந்த எதிர்காலத்தை இலக்காகக் கொண்டு மீளெழும் தன்மை வாய்ந்த, நிலைபேறான பொருளாதாரத்திட்டத்தைக் கட்டியெழுப்புவதற்கு இம்மறுசீரமைப்புக்கள் இன்றியமையாதவையாகும்" எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சர்வதேச பிணைமுறிதாரர்களுடன் எட்டப்பட்டிருக்கும் இணக்கப்பாடு குறித்து விளக்கமளித்து நிதியமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் சர்வதேச தனியார் கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகள் மற்றும் கடன மறுசீரமைப்பு செயன்முறை தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. (ம-7,10)

# வவுனியாவில் ஆசிரியர் ஒருவருக்கு போலி முகநூலில் மிரட்டல்

## கிராம அலுவலர் கைதாகி பிணையில் விடுதலை

வவுனியாவில் ஆசிரியர் ஒருவருக்கு போலி முகநூலில் அவதூறை ஏற்படுத்தி தொலைபேசியில் மிரட்டல் விடுத்த கிராம அலுவலர் ஒருவர் கைதாகி நீதி மன்றத்தால் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா வடக்கு கல்விவலயத்தைச் சேர்ந்த தரணிக்குளம் பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர் கிராம அலுவலரின் ஆதரவுடன் இடம்பெற்ற காடழிப்பு தொடர்பில் கிராம அபிவிருத்தி சங்கம் ஊடாக வெளிப்படுத்தியமையால் குறித்த ஆசிரியருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் போலி முகநூலில் அவ் ஆசிரியர் தொடர்பாக தவறான தகவல்கள் பகிரப்பட்டதுடன், தொலைபேசியிலும் ஆசிரியருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது.

பாதிக்கப்பட்ட குறித்த ஆசிரியர் ஜனாதிபதி செயலகம், பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு, ஒம்புட்ஸ்மன், மாவட்ட அரச அதிபர், பிரதேச செயலாளர் என பலரிடமும் முறையிட்டதுடன், குறித்த சம்பவம் தொடர்பில் கணனி பயன்பாட்டு கட்டுப்பாட்டுப்பிரிவு பொலிஸாருக்கும் முறைப்பாடு செய்திருந்தார்.

குறித்த முறைப்பாடு தொடர்பில் விசாரணை செய்த பொலிஸார் குறித்த முகநூல் கிராம அலுவலருடையது என்பதை கண்டறிந்ததுடன் அதனை முடக்கியிருந்தனர். இந்நிலையில் வவுனியா மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸாரால் தொலைபேசியில் அச்சுறுத்தியமை மற்றும் போலி முகநூலில் அவதூறை ஏற்படுத்தியமை தொடர்பில் கிராம அலுவலருக்கு எதிராக வவுனியா நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

நேற்று வழக்கு விசாரணை இடம்பெற்ற போது மன்றின் கட்டளைக்கு அமைய நீதிமன்ற சிறையில் அடைக்கப்பட்ட கிராம அலுவலர் இரண்டு இலட்சம் ரூபாய் பெறுமதியான சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டார். அத்துடன் வழக்கு விசாரணை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 3 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ம-7,10,250)

# ஆவணப்படம் திரையிடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின் குடிநீர் பிரச்சினையை பேசுபொருளாகக்கொண்டு **"எழுநா"**வால் தயாரித்து வெளியிடப்பட்ட "யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு வந்துவிட்ட தங்கத்திரவம்" என்னும் தலைப்பிலான ஆவணப்படம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் ஆய்வு மையத்தில் திரையிடப்படவுள்ளது.

உள்ளூர் நீர் மூலங்களின் முக்கியத்துவம், அவற்றிற்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் அவற்றை பாதுகாப்பதில் அரசாங்கத்திற்கும் அதிகாரிகளுக்கும் மக்களுக்கும் உள்ள கடப்பாடு என்பவற்றை ஆவணப்படத்தினூடாக சமூகத்தின் மத்தியில் கொண்டுசெல்லும் நோக்கில் இந்தத்திரையிடல் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

## சுங்க தொழிற்சங்கங்கள்

# வேலை நிறுத்தத்தை கைவிடத் தீர்மானம்

இலங்கை சுங்க தொழிற்சங்கங்கள் மேற்கொண்ட தமது வேலை நிறுத்தத்தை கைவிடத் தீர்மானித்துள்ளன.

அதிகாரிகளிடம் இருந்து தமது கோரிக்கைகளுக்கு திருப்திகரமான பதில் கிடைக்காமைக்கு எதிர்ப்பு தெரிவித்து சுங்க அதிகாரிகள் சங்கம் உள்ளிட்ட தொழிற்சங்கங்கள் நேற்று முன்தினம் மற்றும் நேற்று சுகவீன விடுமுறையை அறிவித்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட தீர்மானித்திருந்தன.

சுங்க கட்டளைச் சட்டத்தின் பல்வேறு பிரிவுகளில் திருத்தங்களை மேற்கொள்ளும் அதிகாரிகளின் தன்னிச்சையான தீர்மானத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் தொழிற்சங்க உறுப்பினர்கள் இந்த வேலை நிறுத்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக சங்கத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதிகாரிகளுடன் பல முறை பேச்சுவார்த்தை நடத்தியும் தங்களின் கோரிக்கைகளுக்கு தேவையான தீர்வுகள் எதுவும் கிடைக்காததால் சுங்கத்துறை அதிகாரிகள் இரண்டு நாட்களாக வேலை நிறுத்த நடவடிக்கையில் ஈடுபட்டு வந்திருந்தனர்.

இன்னிலையில் நேற்று (வியாழக்கிழமை) நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டியவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்து அவர்கள் தமது வேலை நிறுத்தத்தை கைவிடத் தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்களாதேஷ் உருவான கதையும் அந் நாட்டின் தேர்தல்களும் - ஒரு பார்வை



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

10

செப்டம்பர் 1991 இல் ஒரு அரசியலமைப்பு வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இது நிறைவேற்று அதிகாரங்களை ஜனாதிபதியிடமிருந்து பிரதமருக்கு மாற்றக் கோரியது. இது ஜனாதிபதி பதவியை பெரும்பாலும் சம்பிரதாய பாத்திரமாக மாற்றியது. அரசியலமைப்புத் திருத்தங்களுக்கு ஆதரவாக வாக்கெடுப்பு அதிகமாக இருந்தது மற்றும் நாடு அதன் ஸ்தாபக அரசியலமைப்பிற்கு இணங்க பாராளுமன்ற ஜனநாயகமாக திரும்பியது.

**1991 வங்காளதேச அரசியலமைப்பு திருத்தம் பற்றி.....**

வங்காளதேசத்தின் அரசியலமைப்பு 4 நவம்பர் 1972 அன்று அரசியலமைப்பு சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இது வெற்றி நாளின் முதல் ஆண்டு நினைவு நாளில் 16 டிசம்பர் 1972 முதல் நடைமுறைக்கு வந்தது. 24 மார்ச் 1982 ஆட்சிக் கவிழ்ப்பைத் தொடர்ந்து இடைநிறுத்தப்பட்டு, நவம்பர் 10, 1986 இல் மீட்டெடுக்கப்பட்டது.

ஷேக் முஜிபுர் ரஹ்மான் சுதந்திரப் போராட்டத்தின் போது அவாமி லீக்கிற்கு தலைமை தாங்கினார், ஜனவரி 1972 முதல் ஒகஸ்ட் 1975 இல் அவர் படுகொலை செய்யப்படும் வரை பங்களாதேசத்தின் தலைமை நிர்வாகியாக பணியாற்றினார். 1974 இல், முஜிபுர் ரஹ்மான் அவசரகால நிலையை அறிவித்து இரண்டாவது புரட்சியைத் தொடங்கினார். பாராளுமன்றத்தின் ஒப்புதலுடன், அவர் பாராளுமன்ற முறையை ஒரு கட்சி சர்வாதிகார ஜனாதிபதி முறைக்கு மாற்றினார்.

8 டிசம்பர் 1990 அன்று, ஜனாதிபதி எர்ஷாத் ராஜினாமா செய்தார் மற்றும் அவாமி லீக் மற்றும் பங்களாதேஷ் தேசியக் கட்சியின் (BNP) உடன்பட்ட வேட்பாளரான தலைமை நீதிபதி ஷஹாபுதீன் அகமது, செயல் தலைவராக (acting President) அதிகாரத்தை ஏற்றுக்கொண்டார்.

இதற்கு முன், அரசியலமைப்பு செயல்முறைகளைப் பின்பற்றும் நோக்கோடு அகமதுவை, எர்ஷாத் துணைத் தலைவராக நியமித்தார். கூடிய விரைவில் பொதுத் தேர்தலை ஒழுங்கமைத்து நடத்துவதும், இதற்கிடையில் அதிக தலையீடு இல்லாமல் நாட்டை நடத்துவதும் அகமதுவுக்கு ஒதுக்கப்பட்ட இரண்டு பணிகளாகும்.

பெப்ரவரி 1991 இல் ஏற்பாடு செய்யப்பட்ட தேர்தல்களில், அவாமி லீக் மற்றும் பிஎன்பி ஆகியவை முக்கிய போட்டியாளர்களாக இருந்தன, ஜமாத்-இ-இஸ்லாமி மற்றும் ஜாதியா கட்சி மற்றும் பல சிறிய கட்சிகள் மற்றும் சுயேட்சை வேட்பாளர்களும் பங்கேற்று இருந்தனர்.

அவாமி லீக் அமைப்பு தன் பலம் பாராளுமன்ற தேர்தலில் வெற்றி பெற அனுமதிக்கும் என்று எதிர்பார்த்தது. இதனால் ஒரு பாராளுமன்ற முறைக்கு ஆதரவளித்தது. ஜனாதிபதி முறையே தொடர வேண்டும் என்று பங்களாதேஷ் தேசியக் கட்சியின் (BNP) வாதிட்டது.

இருப்பினும், பாராளுமன்ற தேர்தலின் பின BNP மக்கள் வாக்குகளில் 31 சதவீதத்தையே பெற்றிருந்ததால், ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற முடியும் என்பது தெளிவாக இருக்கவில்லை. இதன் காரணமாகவும், பாராளுமன்றத்தில் BNP ஆட்சியில் இருந்ததாலும், ஜனாதிபதியிடம் இருந்து பாராளுமன்றத்திற்கு அதிகாரத்தை மாற்றுவது BNP இற்கு சாதகமாகத் தோன்றியது.

இதன் விளைவாக, யூலை 2 அன்று BNP அரசியலமைப்பு (பன்னிரண்டாவது திருத்தம்) மசோதா 1991 ஐ அறிமுகப்படுத்தியது. அவாமி லீக் தனது சொந்த அரசியலமைப்பு திருத்த மசோதாவையும் முன் வைத்தது. இரு கட்சிகளின் சமரப்பிப்பில் இருந்த கருத்து வேறுபாடுகளை தீர்க்க 15 பேர் கொண்ட தேர்வுக்குழு அமைக்கப்பட்டது.

இந்தக் குழு ஒருமனதாக அறிக்கை ஒன்றைத் தயாரித்து ஒகஸ்ட் 6ஆம் திகதி பாராளுமன்றத்தின் ஒப்புதலுக்காக முன்வைத்தது. இரண்டு சுற்று வாக்கெடுப்புக்குப் பிறகு, மசோதா வாக்குகள் வித்தியாசத்தில் நிறைவேற்றப்பட்டது. பின்னர் திருத்தம் மக்கள் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

**1991 வங்காளதேச அரசியலமைப்பு மக்கள் வாக்கெடுப்பு**

வங்காளதேசத்தில் 15 செப்டம்பர் 1991 அன்று ஒரு அரசியலமைப்பில் பன்னிரண்டாவது திருத்தம் மேற்கொள்வதற்காக மக்கள் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இந்த திருத்தங்கள் பாராளுமன்ற அரசாங்கத்தை மீண்டும் அறிமுகப்படுத்த வழிவகுக்கும். ஜனாதிபதி அரசியலமைப்பு ரீதியிலான தலைவராவார், ஆனால் பிரதமரே நிர்வாகத் தலைவர். இத் திருத்தம் துணைத் தலைவர் பதவியையும் நீக்கியது. ஜனாதிபதி பாராளுமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்படுவார்.

வாக்காளர்கள் "வங்காளதேச மக்கள் குடியரசின் அரசியலமைப்பு (பன்னிரண்டாவது திருத்தம்) மசோதா, 1991இற்கு ஜனாதிபதி ஒப்புதல் அளிக்க வேண்டுமா இல்லையா? " என்ற கேள்விக்கு விடையளிக்கும் முகமாக இவ் வாக்கெடுப்பு நடைபெற்றது. முடிவில் 35.2% வாக்குகள் பதிவாகின. வாக்களித்தோரில் 83.6% பேர் ஆதரவாக வாக்களித்தனர்.

பொது மக்கள் கருத்து கேட்டலின் படி, மீண்டும் வங்காளதேசத்தில் பாராளுமன்ற ஜனநாயகம் தோற்றுவிக்கப்பட்டது. அதன்படி குடியரசு தலைவர், அரசியல் சாசன சட்டத்தின்படி, நாட்டின் அதிபராகவும், பிரதம அமைச்சர், நாட்டின் நிர்வாகத் தலைவராகவும் செயற்படும் படி, நாட்டின் அரசியல் சாசனச் சட்டம் திருத்தப்பட்டது. நாட்டின் அதிபரை, பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுப்பர்.

மார்ச் 1994 இல், பங்களாதேஷ் அவாமி லீக் தலைமையிலான எதிர்க்கட்சிகள் பாராளுமன்ற இடைத் தேர்தல் தொடர்பான சர்ச்சையில் பிஎன்பி அரசாங்கம் மோசடி செய்ததாகக் கூறி, முழு எதிர்க்கட்சியினராலும் பாராளுமன்றத்தை காலவரையற்ற புறக்கணிக்கு செய்ய வழிவகுத்தது.

கலிதா ஜியாவின் அரசாங்கம் ராஜினாமா செய்ய வேண்டும் என்றும் மற்றும் ஒரு பொதுத் தேர்தலை ஒரு காபந்து அரசாங்கம் மேற்பார்வை செய்ய வேண்டும் என்றும் அதன் கோரிக்கையை வலியுறுத்தி எதிர்க்கட்சிகள் மீண்டும் மீண்டும் பொது வேலை நிறுத்தங்களைத் தொடங்கியது.

காமன்வெல்த் செயலகத்தின் அனுசரணையில், சர்ச்சையை சமரசம் செய்வதற்கான முயற்சிகள் தோல்வியடைந்தன. 1994 டிசெம்பரின் பிற்பகுதியில் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கான மற்றொரு முயற்சி தோல்வியடைந்ததை அடுத்து, எதிர்க்கட்சிகள் மொத்தமாக பாராளுமன்றத்தில் இருந்து ராஜினாமா செய்தனர்.

அரசாங்கத்தை ராஜினாமா செய்ய கட்டாயப்படுத்தும் முயற்சியில் எதிர்க்கட்சிகள் அணிவகுப்பு, ஆர்ப்பாட்டங்கள் மற்றும் வேலைநிறுத்தங்கள் போன்ற பிரச்சாரங்களைத் தொடர்ந்தன.

அவாமி லீக்கின் ஷேக் ஹசீனா, ஜாதியா கட்சி மற்றும் பங்களாதேஷ் ஜமாத்-இ-இஸ்லாமி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் 15 பெப்ரவரி 1996 இல் திட்டமிடப்பட்ட தேசியத் தேர்தலைப் புறக்கணிப்பதாக உறுதியளித்தன.

**பெப்ரவரி 1996 பங்களாதேச பொதுத் தேர்தல்**

பங்களாதேசத்தில் 15 பெப்ரவரி 1996 அன்று பொதுத் தேர்தல்கள் நடத்தப்பட்டன. பெரும்பாலான எதிர்க்கட்சிகளால் அவை புறக்கணிக்கப்பட்டன. மேலும் பங்களாதேசத்தின் பாராளுமன்றத் தேர்தல் வரலாற்றில் மிகக் குறைவான 21% வாக்குப்பதிவு மட்டுமே பதிவாகியது. இதன் விளைவாக, தேர்தல்கள் நடந்த 300 இடங்களில் 278 இடங்களை பங்களாதேஷ் தேசியவாதக் கட்சி (BNP) வென்றது. 30 இடங்கள் கூடுதலாக பெண்களுக்கு மட்டும் ஒதுக்கப்பட்டன. இவர்கள் பாராளுமன்றத்தினாலேயே தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

தேர்தலைத் தொடர்ந்து, ஜனாதிபதி, அரசாங்கத்தை அமைக்க ஜியாவை அழைத்தார். ஆனால் இந்த நிர்வாகம் குறுகிய காலமே நீடித்தது. 12 நாட்கள் மட்டுமே நீடித்தது.

மற்ற கட்சிகளால் உடனடி தொடர் ஹர்த்தால் (வேலைநிறுத்தம்) நடத்தப்பட்டது மற்றும் புதிய, சுதந்திரமான தேர்தலுக்கான கோரிக்கைகள் நிறைவேறும் வரை காலவரையற்ற ஒத்துழையாமை இயக்கம் நடத்தப்பட்டது.

மார்ச் 1996 இல், அரசியல் கொந்தளிப்பு அதிகரித்ததைத் தொடர்ந்து, அமர்க்களமான பாராளுமன்றம் பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தத்தை இயற்றியது. அது அதிகாரத்தை ஏற்கவும் புதிய பாராளுமன்றத் தேர்தல்களை நடத்தவும் நடுநிலையான காபந்து அரசாங்கத்தை நிறுவியது. முன்னாள் தலைமை நீதிபதி முகமது ஹபிபுர் ரஹ்மான் இடைக்கால அரசாங்கத்தில் தலைமை ஆலோசகராக (பிரதமருக்கு இணையான பதவி) நியமிக்கப்பட்டார். புதிய பாராளுமன்றத் தேர்தல் ஜூன் 1996 இல் நடத்ததிட்டமிடப்பட்டது.

**யூன் 1996 பங்களாதேச பொதுத் தேர்தல்**

வங்காளதேசத்தில் 12 யூன் 1996 அன்று பொதுத் தேர்தல்கள் நடத்தப்பட்டன. இதன் விளைவாக வங்காளதேச அவாமி லீக் வெற்றி பெற்றது. இது 300 இடங்களில் 146 இடங்களை வென்றது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அத்தியாவசிய...

முதல் அமுலாகியுள்ளது.

அதன்படி, ஒரு கிலோ உருளைக் கிழங்கு 215 ரூபாயாகவும் ஒரு கிலோ பருப்பு 282 ரூபாயாகவும் ஒரு கிலோ வெள்ளைச் சீனி 269 ரூபாயாகவும் குறைக்கப்பட்டுள்ளன. (ம-7,10)

## கொக்குத்தொடு...

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணியின் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணியானது நேற்று மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

நேற்று பிற்பகல் இரண்டு மணி யளவில் ஆரம்பிக்கப்பட்ட குறித்த அகழ்வுப் பணியில் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன், தொல்பொருள் சிரேஷ்ட பேராசிரியர் ராஜ் சோமதேவ, முல் லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி க.வாசுதேவ, தொல்லியல் திணைக்களத்தினர், காணாமல் போனோருக்கான அலுவலகத்தின் தலைவர் மகேஸ் கட்டுளந்த மற்றும் பணிப்பாளர் ஜெ.தற்பரன், வீதி அபி விருத்தி அதிகார சபையினர், மனித உரிமைகள் சட்டத்தரணிகளான எஸ்.ரட்ணவேல், ரணித்தா ஞானராசா, வி.கே.நிரஞ்சன் மற்றும் பொலிஸார், விசேட அதிரடிப்படையினர் உள்ளிட்ட வர்களும் பங்கேற்றிருந்தனர்.

இன்று காலை 8.30 மணி யளவில் இடம்பெற இருக்கின்ற அகழ்வுப் பணிகளுக்கு முன்னாயத்தமான நட வடிக்கைகளே நேற்று இடம்பெற்றிருந் தது.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி க.வாசு தேவ, நிதி ஒதுக்கீடு காலம் தாழ்த் தப்பட்டதன் காரணமாக அகழ்வுப் பணியில் தாமதம் ஏற்பட்டிருந்தது. இன்றிலிருந்து (நேற்று) 10 நாட்கள் அகழ்வுப் பணிகள் நடைபெற உத் தேசிக்கப்பட்டுள்ளது.

இதுவரை அகழ்ந்தெடுக்கப்பட்ட பகுதி தவிர்ந்த ஏனைய மனித எலும்புக் கூடு இருக்கும் பகுதி என அடை யாளம் காணப்பட்ட இடங்கள் துப்புரவு செய்யப்பட்டதாகத் தெரிவித்தார்.

இதுவரையில் குறித்த மனிதப் புதைகுழியிலிருந்து 40 மனித எலும்புக் கூட்டுத் தொகுதிகளும், தமிழீழ விடு தலைப் புலிகள் அமைப்பு போராளி கள் பயன்படுத்தும் இலக்கத்தகடுகள், துப்பாக்கிச் சன்னங்கள், உடைகள் உள்ளிட்ட பல தடயப் பொருட்களும் மீட்கப்பட்டிருந்தன. (ம-7,10,299)

## தோட்டத்...

வேதனத்தை அதிகரித்து வெளியிடப் பட்ட வர்த்தமானி அறிவித்தலை அமுல்படுத்துவதற்கு இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட மாட் டாது என மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பைச் சவாலுக்கு உட் படுத்தி பெருந்தோட்ட நிறுவனங்கள் தாக்கல் செய்துள்ள மனு மீதான விசா ரணையின்போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அக்கரப்பத்தனை பெருந்தோட்ட நிறுவனம் உள்ளிட்ட 21 நிறுவனங்கள் இந்த மனுவைத் தாக்கல் செய்துள் ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

## தேர்தல்...

தேசிய அரசாங்கத்தில் இணைவது பொருத்தமானதல்ல, தமிழ் மக்களின் பிரச்சினைகளை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கக்கூடிய தேசிய அரசாங் கத்தை தமிழ்க்கட்சிகள் ஒன்றிணைக்க வேண்டும் என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன்.

அத்தோடு இப்போது தேர்தல் நடைபெற்றால் எந்த வேட்பாளரும் 50% வாக்குகளைப் பெற முடியாது, பொருளாதார நெருக்கடிக்குப் பிறகு நிலையான ஆட்சி அமைய வேண்டும்.

ஆனால் தற்பொழுது தேர்தல் நடைபெற்று குறுகிய காலத்தில் ஆட்சி மாறினால் பாரிய பிரச்சினை ஏற்படும். இந்த நாட்டில் இன்னொரு பிரச்சினை ஏற்பட்டால், நாட்டை மீட்க முடியாது.

மக்களின் பாதுகாப்புத் தொடர்பிலும் நாம் சிந்திக்க வேண்டும். ஆகவே தேர் தலை பிற்போட வேண்டும் என்பதே எனது கருத்து எனத் தெரிவித்தார். (ம-7,10)

## தடைப்பட்ட...

முறைப்படுத்த முடியும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த தெரிவித்துள்ளார்.

நிலையான நாட்டிற்கு ஒரு வழி என்ற தொனிப்பொருளில் நேற்று ஜனாதிபதி ஊடக மையத்தில் நடை பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மின் வலு மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் இதனைத் தெரிவித்தார்

இதன் மூலம் மின் நெருக்கடியை தீர்க்க இது பெரும் உதவியாக இருக் கும் என்றும் நாட்டை அபிவிருத்தி செய் வதற்காக அரசாங்கம் முன்னெடுத் துள்ள வேலைத்திட்டத்தை சீர் குலைக்கும் வகையில் எதிர்க்கட்சி களின் சில தரப்பினர் வேலைகளில் ஈடுபட்டு வருவதாகவும் இராஜாங்க அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டி யிருந்தார். (ம-7,10)

## தெல்லிப்பழை...

மகளிர் இல்லம் 1983ஆம் ஆண்டு கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களால், ஆதரவற்ற பெண் பிள் ளைகளின் வாழ்வின் முன்னேற்றத் துக்காக ஆரம்பிக்கப்பட்டது.

தற்போது 40 ஆண்டுகளைக் கடந்து மிகச் சிறப்பாக இயங்குகின்ற இம்மகளிர் இல்லம் ஒரு சிறந்த நிர் வாகத்தின் கீழ் நடத்தப்பட்டு வரு கிறது.

எனினும் இம்மகளிர் இல் லம் மூடப்பட்டதாக வெளி வந்த செய்தி முற்றிலும் உண் மைக்குப் புறம்பானது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தெல்லிப் பழை மகளிர் இல்லத் தின் நடைமுறை களை அறியும் பொருட்டு, வடக்கு மாகாண ஆளுநரால் நியமிக்கப்பட்ட மூவர் கொண்ட குழு நேற்று அங்கு களத்தரி சிப்பை மேற் கொண்டுள்ளது.

இதேவேளை தெல்லிப் பழை மகளிர் இல்லம் வடக்கு மாகாண சிறுவர் நன்நடத் தைத் திணைக் களத்தின் கீழ் பதிவு செய்யப் பட்ட அமைப்பு அல்ல எனவும் குறித்த மக ளிர் இல்லம் சமயம் சார்ந்து பெண் பிள்ளைகள் தங்குகின்ற ஆன் மிக அமைப்பு களின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்ட அமைப்பு என்றும் சுட்டிக் காட்டப் பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத் தக்கது. (ம)

## மீள...

யுக்திய சுற்றி வளைப்பு நட வடிக்கை நேற்று முதல் மீள இரா ணுவத்தின் ஒத்து ழைப்புடன் ஆரம் பிக்கப்பட்டுள்ள தாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர்நிஹால்தல்துவதெரிவித்துள்ளார்.

திட்டமிடப்பட்ட குற்றச் செயல்கள் மற்றும் போதைப் பொருள் மோசடியை கட்டுப்படுத்துதற்காக கடந்த காலங் களில் நாடளாவிய ரீதியில் யுக்திய சுற்றிவளைப்பு நடவடிக்கை முன்னெ டுக்கப்பட்டிருந்தது.

பொலிஸ் மா அதிபரின் அறிவுறுத் தலுக்கமைய இந்த நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டிருந்ததுடன் சுற்றி வளைப்புக்களின்போது பெருமளவி லான போதைப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டதுடன் சட்டவிரோதமாக கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களும் பொலிஸாரினால் பொறுப்பேற்கப்பட்டன.

மேலும் சுமார் 6 ஆயிரத்துக்கும் மேற் பட்ட சந்தேக நபர்கள் யுக்திய சுற்றி வளைப்பு நடவடிக்கைகளின்போது கைது செய்யப்பட்டனர்.

இந்த நிலையில் நேற்று முதல் மீள வும் யுக்திய சுற்றிவளைப்பு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் முதற் கட்டமாக கொழும்பு நகரை உள்ளடக் கிய வகையில் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் நாடாளாவிய ரீதியில் இந்த வேலைத்திட்டம் நடை முறைப் படுத்தப்படவுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிஹால்தல்துவ தெரிவித்துள் ளார். (ம-7,10)


மஹஜன சம்பத
திகதி 2024.07.04
சீட்டிழுப்பு இலக்கம் 5524
Y 8 3 7 4 2 7
அத சம்பத
Y 7 4 2 7
சீட்டிழுப்பு இலக்கம் 0099
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.07.04
சீட்டிழுப்பு இலக்கம் - 1554
G 12 35 47 55 G
Double Chance 17653

மெகா பவர்
திகதி 04/07/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1872
U 03 19 25 42 44
85771

லக்கி 7 VIP
திகதி 2024.07.04
சீட்டிழுப்பு இலக்கம் 350
H 5 8 3 9 8 6 H

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3766
சீட்டிழுப்பு திகதி 04.07.2024
D 37 57 63 78
D 41520
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.07.04
சீட்டிழுப்பு இலக்கம் 0833
மகரம் 14 18 24 39 மகரம்
04358 28

உத்தியோகபூர்வ முடிவுகள்
04.07.2024 வெற்றி வாரம் 232 வர்ணம் மஞ்சள்
V 9 6 7 5 3 0
36755
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,942,672.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2498 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 04.07.2024 தினம் வியாழன்
08 38 69 71 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 96,946,724.00
DLB

சனிதா
திகதி 2024.07.04 வெற்றி வாரம் 4659 வர்ணம் சிவப்பு
01 37 66 72 K
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.64,082,221.20
ரூ. 100,000/- 18661
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4210 வர்ணம் கபிலம்
சீட்டிழுப்பு திகதி 2024.07.04 தினம் வியாழக்கிழமை
10 14 16 62 கடகம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,000,000.00
570867
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
V 15 09 10 30 31
1674
04.07.2024 வியாழன்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 531,265,735.40
DLB

வியாழக்கிழமை
வெற்றி வாரம் : 2324
சீட்டிழுப்பு திகதி : 2024.07.04
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 125,204,244.80
ADA KOTIPATHI
36 51 54 59 F
355900
DLB


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பழுதடைந்த தயிரை

# விற்பனைக்கு வைத்திருந்த கடை உரிமையாளருக்கு தண்டம்

யாழ்ப்பாணம் நகர் பகுதியை அண்டிய பகுதியில் பழுதடைந்த தயிரை விற்பனைக்காக வைத்திருந்தமை மற்றும் உரிய சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்காது, பால் உற்பத்தி பொருட்களை விற்பனை செய்யும் நிலையத்தினை நடாத்திசென்றவருக்கு 30 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

பொது சுகாதார பரிசோதகரினால் குறித்த பால் உற்பத்தி விற்பனை நிலையம் திடீர் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட வேளை, பழுதடைந்த நிலையில் ஒரு தொகை தயிர் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

அத்துடன் விற்பனை நிலையத்தில் சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்காது பால் உற்பத்தி பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வந்தமையும் கண்டறியப்பட்டது.

இவை தொடர்பில் பொது சுகாதார பரிசோதகரினால் யாழ்.மேலதிக நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.

வழக்கு விசாரணையின் போது விற்பனையாளர் தன் மீதான குற்றத்தை ஏற்றுக்கொண்டதை அடுத்து, அவரை கடுமையாக எச்சரித்த மன்று 30 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்தது.

அத்துடன் விற்பனை நிலையத்தில் காணப்படும் சுகாதார குறைப்பாடுகளை நிவர்த்தி செய்யும் வரையில் விற்பனை நிலையத்தை சீல் வைத்து மூடுமாறு மன்று உத்தரவிட்டது. (ம-7.10.33)

வடக்கு – கிழக்கை மையமாகக் கொண்டு

# சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டை நடத்துவோம் - சஜித்

(மட்டக்களப்பு)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை மையமாகக் கொண்டு சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டை நடத்துவோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார். ஏறாவூரில் நடைபெற்ற நிகழ்விலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மட்டக்களப்பு மாவட்டம் உள்ளடங்கலாக கிழக்கு மாகாணத்தின் பங்களிப்பு குறித்து ஆராய்ந்த போது, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பங்களிப்பு மிகக்குறைவான மட்டத்திலேயே அமைந்து காணப்படுகின்றன.

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மேல் மாகாணம் 42% பங்களிப்பை வழங்கி வருகிறது. மீதமுள்ள 58%பங்களிப்பை ஏனைய 8 மாகாணங்களும் வழங்கிவருகின்றன. கிழக்கு மாகாணம்5%க்கும்குறைவான பங்களிப்பையே வழங்கி வருகிறது.

உலகில் பல நாடுகள் யுத்தம் முடிவடைந்து சர்வதேச நன்கொடையாளர் மாநாடுகளை நடத்திய போதிலும், எமது நாட்டில் யுத்தம் முடிவடைந்து இன்று வரையில் 15 வருடங்கள் கடந்துள்ள நிலையிலும், அன்று தொடக்கம் இன்று வரையுள்ள எந்தத் தலைவராலும் சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டைக் கூட்ட முடியவில்லை. ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் வடக்கு, கிழக்கு ஆகிய இரு மாகாணங்களையும் மையப்படுத்தி நாடு தழுவி சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டை நாம் நடத்துவோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இந்த 2 மாகாணங்களிலும் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், போரினால் இடம்பெயர்ந்த கணவனற்ற குடும்பங்கள் மற்றும் போர்வீரர்கள் என சமூகத்தில் பல மட்டத்தவர்கள் வாழ்ந்து வருகின்றனர். போருக்குப் பின்னரான காலப்பகுதியில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து இலங்கையர்களாக நாம் இந்நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும். பிரிவினையை தொடர்ந்தால் நாட்டுக்கு எதிர்காலம் இல்லை. மத அடிப்படையில் இனங்கள் ஒன்றிணைய வேண்டும். இந்த பிரபஞ்சம் வேலைத்திட்டத்தின் மூலம் இன, மத, சாதி, வர்க்க, கட்சி பேதமின்றி அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இவை அனைத்தும் வாய்மொழியாகச் சொல்லப்படுவது போலவே செயல்படுத்துவேன். ரணசிங்க பிரேமதாச ஜனாதிபதியின் புதல்வர் என்ற வகையில் வடக்கு, கிழக்கு இரண்டு மாகாணங்களை மையப்படுத்தி சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டை நடாத்தி, மட்டக்களப்பு மாவட்டத்தின் ஒவ்வொரு பிரிவிலும் கிராமங்களிலும் அபிவிருத்தி அலகுகளை நிறுவுவேன் என தெரிவித்தார். (ம-7,10)

# சம்பந்தனின் இறுதி அஞ்சலி நிகழ்வில் அண்ணாமலை

இலங்கை தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் இரா.சம்பந்தனின் இறுதி அஞ்சலி நிகழ்வில் பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழகத் தலைவர் அண்ணாமலை கலந்து கொள்ளவுள்ளார்.

சம்பந்தனின் இறுதிக்கிரியைகள், நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை திருகோணமலையில் நடைபெறவுள்ளன.

இந்நிலையில், அண்ணாமலை தனது வரவை தன்னிடம் தொலைபேசி மூலம் உறுதிசெய்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினும், இறுதி அஞ்சலி நிகழ்வில் பங்கேற்கும் வாய்ப்புகள் உள்ள போதும், அது தொடர்பில் இதுவரை உறுதி செய்யப்படவில்லை எனவும் சிறீதரன் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-7,10)


## மணமகள் தேவை

1981 இல் பிறந்த கார்த்திகை 4 ஆம் பாதம் உடைய லண்டன் குடியுரிமை பெற்ற B.Sc Jaffna M.Sc UK சொந்த தொழில் செய்யும் விவாகரத்துப் பெற்ற மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு :
077 110 7624 (C-737)

## வேலை வாய்ப்பு

எமது நிறுவனத்தில் பின்வரும் நிலைகளில் பணியாளர் வெற்றிடத்திற்கு ஆளணி உள்வாங்கப்படவுள்ளனர்.
ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

- அலுவலக பணியாளர் (O/L, A/L) (கணினி அறிவுடையோர்)
- களஞ்சிய பணியாளர் (O/L, தரம் 10)

A to Z CONSTRUCTION Equipment Rental Service, Koolavady, Anaicoddai.
021 222 9198, 077 655 5395
(தெரிவு செய்யப்படுவோருக்கான சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்) (1389)

## வேலை இடம் தேவை

யாழ் புறநகர், நல்லூர் மற்றும் திருநெல்வேலி பகுதிகளில் குத்தகைக்கு அல்லது வாடகைக்கு வேலைத்தள கட்டட அமைப்புடனான இடம் தேவைப்படுகின்றது.

தொடர்புகளுக்கு :
077 919 1529 (1387)

## Care Giver - பராமரிப்பாளர்

கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - வீசா சேவைகள்.
CIMS College
49A, Chapel Street, Jaffna.
(C-0741)
College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

கணக்காளர் கற்கை நெறிகள்
Chartered Accounting Courses
Business Level - I,II (06.07.2024)

தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு
aat (Sri Lanka)
(AA1 - 06.07.2024)
G.C.E O/L பெறுபேற்றினை எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்,
(AA2, AA3 - 17.08.2024) (C-0718)

Certificate Course in English
Further Details : Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna.
021 222 3382/ 021 222 9149
077 440 5917

## அனைத்து நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள்

குறைந்த விலையில்

- Air Ticket Date Change
- Online Visa Appoinments
- Sri Lanka Visa Extension
- All Country Visa Services
- Travel Insurance
- Travel Itinerary

உங்கள் அருகாமையில் எமது நேரடி கிளைகள்
கொழும்பு | மட்டக்களப்பு | திருகோணமலை | கிளிநொச்சி | புதுக்குடியிருப்பு | கொடிகாமம் | சாவகச்சேரி | புத்தூர் | யாழ்ப்பாணம் | நச்சிமார் கோவிலடி | பண்டத்தரிப்பு | கல்வயல் | மானிப்பாய் | சங்கானை | கோப்பாய் | நெல்லியடி | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை

V2 TRAVELS 0768226240 0768226241 (C-0741)


## V2 VISA SERVICES

கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas- All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-0741)


## 31ம் நாள் நினைவலைகள்



தோற்றம்
27.08.1938

மறைவு
05.06.2024

### அமரர் சபாபதி நவரத்தினம்

மாதம் ஒன்று ஆகியது
மாறாத் துயர் ஆறவில்லை
காலம் ஓடிச் செல்கின்றது
கவலை இன்றும் தீரவில்லை
முடிவு என்பது எல்லோர்க்கும்
முடிவானது நிச்சயம் தான்
இருந்த போதும் இந்நிலையை
ஏற்க மனம் மறுக்கின்றது
முடிவில்லா மறுமையில் நீர்
இன்புற்று இருப்பீர் என
இறைபதம் நாடுகின்றோம்
குறையின்றி ஏற்றிடுவீர்!
ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

"குமரகோட்டம்"
மானிப்பாய் வீதி,
கோப்பாய்

நினைவுடன்
குடும்பத்தினர்

(1385)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.07.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org